சிறப்பு குறிப்பு 11

## முக்கிய பொருளாதாரக் கொள்கை மாற்றங்களும் வழிமுறைகளும் 2013[1]

### உண்மைத் துறை

2013 சனவரி 06 - திரவப் பெற்றோலிய வாயுவின் 12.5 கிலோகிறாம் உருளையொன்றின் விலையானது ரூ.150 இனால் ரூ.2,396 இற்கு அதிகரிக்கப்பட்டது.

2013 பெப்புரவரி 23 - பெற்றோலிய உற்பத்திகளின் சில்லறை விலைகள் பின்வருமாறு அதிகரிக்கப்பட்டன:

- பெற்றோல் ரூ.3 இனால் லீற்றரொன்றிற்கு ரூ.162 இற்கு
- டீசல் ரூ.6 இனால் லீற்றரொன்றுக்கு ரூ.121 இற்கு

2013 ஏப்பிறல் 01 - வலு உற்பத்திக்காக பாவிக்கப்படும் எரிபொருள் எண்ணெயின் சில்லறை விலைகள் பின்வருமாறு அதிகரிக்கப்பட்டன.

- எரிபொருள் எண்ணெய் 1,500 (குறைந்த கந்தகம்) ரூ.25 இனால் லீற்றரொன்றிற்கு ரூ.100 இற்கு அதிகரிக்கப்பட்டது.
- எரிபொருள் எண்ணெய் 1,500 (கூடிய கந்தகம்) ரூ.25 இனால் லீற்றரொன்றிற்கு ரூ.90இற்கு அதிகரிக்கப்பட்டது.
- எரிபொருள் எண்ணெய் 3,500 (கூடிய கந்தகம்) ரூ.25 இனால் லீற்றரொன்றிற்கு ரூ.90 இற்கு அதிகரிக்கப்பட்டது.

2013 ஏப்பிறல் 20 - சராசரித் தீர்வை ஓர் அலகிற்கு ரூ.18.52 இற்கு அதிகரிக்கப்பட்டது. வீட்டு நுகர்வுக்குப் பொருந்தக்கூடிய புதிய மின் தீர்வை பின்வருமாறு:

| நுகர்வு (கிவாம/ மாதம்) | வலுக் கட்டணம் (ரூபா/கிவாம ) | நிலையான கட்டணம் (ரூபா/மாதம்) | எரிபொருள் சீராக்கக் கட்டணம் (% ) |
|---|---|---|---|
| ஒரு மாத நுகர்வு 0-60 அலகுகளுக்குட்பட்ட நுகர்வு | | | |
| 0-30 | 3.00 | 30.00 | 25 |
| 31-60 | 4.70 | 60.00 | 35 |
| ஒரு மாத நுகர்வு 60 அலகுகளுக்கு மேல் | | | |
| 0-60 | 10.00 | பொருத்தமற்றது | பொருத்தமற்றது |
| 61-90 | 12.00 | 90.00 | 10 |
| 91-120 | 26.50 | 315.00 | 40 |
| 121-180 | 30.50 | 315.00 | 40 |
| >180 | 42.00 | 420.00 | 40 |

2014 பெப்புருவரி 02 - 400 கிறாம் முழு ஆடைப் பால்மா பையொன்றின் அதிகபட்ச சில்லறை விலையானது ரூ.61 இனால் ரூ.386 இற்கு அதிகரிக்கப்பட்டதுடன் 1 கிலோகிறாம் முழு ஆடைப் பால்மா பையொன்றின் அதிகபட்சச் சில்லறை விலையானது ரூ.152 இனால் ரூ.962 இற்கு அதிகரிக்கப்பட்டது.

### வெளிநாட்டுத் துறை

**வர்த்தகமும் தீர்வையும்**

2013 சனவரி 01 - நிலச்சமன்பொறி, படிப்படுத்தி, நிலமட்டப்படுத்தி, அகழ்பொறி, வலு சேமிக்கும் மின் குமிழ் தயாரிப்பதற்கான மூலப் பொருட்கள், வீதி உழவியந்திரத்திற்கான அரைப்பெட்டி, பவுசர்கள் மற்றும் தீயணைப்பு வாகனங்கள் என்பவற்றின் இறக்குமதிக்கு பெறுமதி சேர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது.

[1] இது 2013 காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட முக்கிய பொருளாதார கொள்கை மாற்றங்கள் மற்றும் அளவீடுகளை உள்ளடக்குகின்றது. 2014இன் முதல் மூன்று மாதங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட மற்றும் கிட்டிய எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட எதிர்பார்க்கும் கொள்கை மாற்றங்கள் மற்றும் அளவீடுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- சூரிய ஒளி வலு உருவாக்கத்திற்கான சூரிய ஒளிப் பலகை அலகுகள், உதிரிப்பாகங்கள், அல்லது சூரிய ஒளி வீட்டு முறைமைகள், நிலக்கரி, நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சரினால் ஒப்புதலளிக்கப்பட்ட எந்தவொரு சர்வதேச விளையாட்டு நிகழ்வுக்குமான பொருட்கள், மற்றும் பட்டை தீட்டப்பட்டு விற்கப்படுகையில் சிறப்புப் பணிக் கட்டணம் விதிக்கப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு இரத்தினக்கற்கள் என்பவற்றின் இறக்குமதி தேசத்தை கட்டியெழுப்பும் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது.

2013 சனவரி 22 - வெளிறச் செய்யப்படாத பருத்தியால் நெய்யப்பட்ட துணிகள் மற்றும் ஏனைய துணிகளின் இறக்குமதி மீதான செஸ் தீர்வையானது முறையே கிலோகிராம் ஒன்றிற்கு ரூ.75 இற்கும் கிலோ கிறாம் ஒன்றிற்கு ரூ.100 இற்கும் குறைக்கப்பட்டது.

2013 பெப்புருவரி 08 - பின்வரும் விடயங்களின் இறக்குமதி மீது நான்கு மாத காலப்பகுதிக்கு சிறப்புப் பண்டத்தீர்வை விதிக்கப்பட்டது.

| விடயம் | வீதம் (ரூ./கி.கி) |
|---|---|
| தாவர உள்ளீடு எண்ணெய் அல்லது பாபசு மர எண்ணெய் மற்றும் அதன் பகுதி | |
| மசகெண்ணெய் | 110 |
| ஏனையவை | 115 |

2013 மாச்சு 01 - இயல்பிழக்காத தேறல் மதுசார இறக்குமதிகள் தடை செய்யப்பட்டன.

2013 ஏப்பிறல் 03 - தேறல் மதுசார இறக்குமதிக்கு கலால் வரிகள் மற்றும் ஏனைய நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

- அரசினால் ஒப்புதலளிக்கப்பட்ட ஆராய்ச்சி மற்றும் கல்வி நிறுவனங்கள், மருத்துவமனைகள், மற்றும் அரச திணைக்களங்கள்; மருத்துவ தயாரிப்புக்களின் உற்பத்திகள் மற்றும் கைத்தொழில் உற்பத்திகள் என்பவற்றின் பயன்படுத்தப்படும் மதுசாரத்தின் இறக்குமதி (தேறல் மது சாரம்) மீதான உற்பத்தித் தீர்வை அதிகரிக்கப்பட்டவேளையில் உள்நாட்டுத் தயாரிப்பு மீதான உற்பத்தித் தீர்வை குறைக்கப்பட்டது.

2013 மே 03 - உருளைக்கிழங்குகளின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை கிலோகிறாமொன்றிற்கு ரூ.15 இலிருந்து கிலோகிறாமொன்றிற்கு ரூ.25 இற்கு நான்கு மாத காலப்பகுதிக்கு அதிகரிக்கப்பட்டது.

2013 யூன் 08 - உடன் மற்றும் குளிரூட்டிய மீன், மாசிக்கருவாடு, நெத்தலிக் கருவாடு, கருவாடு, சின்ன வெங்காயம், பெரிய வெங்காயம், உள்ளி, பட்டாணி, கொண்டைக் கடலை, பாசிப்பயறு, தட்டைப்பயறு, மைசூர் பருப்பு, உடன் தோடம் பழங்கள், திராட்சைப் பழங்கள், மற்றும் அப்பிள்கள், மிளகாய், கொத்தமல்லி, நற்சீரகம், பெருஞ்சீரகம், மஞ்சள், வெந்தயம், குரக்கன், குரக்கன் மாவு, உளுத்தம் மா, நிலக்கடலை, கடுகு, சோயா அவரை/தாவர/சூரியகாந்தி/தேங்காய் எண்ணெய், தகரத்திலடைக்கப்பட்ட மீன் மற்றும் கரும்பு அல்லது பீற் சீனி என்பவற்றின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை மேலும் ஆறு மாத காலத்திற்கு நீடிக்கப்பட்டது.

2013 யூன் 21 - தங்க இறக்குமதி மீது 5 சதவீதமான சுங்கத் தீர்வையும் சுங்கத் தீர்வையின் மீது 100 சதவீதமான மேலதிகக் கட்டணமும் விதிக்கப்பட்டது.

2013 யூலை 11 - பெரிய வெங்காய இறக்குமதிகள் மீதான சிறப்புப் பண்டத் தீர்வை ஐந்து மாத காலத்திற்கு கிலோகிறாம் ஒன்றிற்கு ரூ.15 இலிருந்து கிலோகிறாம் ஒன்று ரூ.30 இற்கு அதிகரிக்கப்பட்டது.

2013 யூலை 18 - நெல் மற்றும் அரிசி என்பனவற்றின் ஏற்றுமதிகள் மீது விதிக்கப்பட்ட வரையறைகள் நீக்கப்பட்டன.

2013 யூலை 31 - குடிவகை, புகையிலை உற்பத்தி மற்றும் பால் உற்பத்திகள் (வெண்ணெய்க்கட்டி உட்பட) மீதான சுங்கத் தீர்வை மேல் நோக்கித் திருத்தப்பட்டது.

2013 ஓகத்து 01 - தூய ஐதரோகுளோரோ புளோரோ காபன் இறக்குமதிகள், இறக்குமதிக்கான கோட்டா முறைமையினை விதிப்பதன் மூலம் வரையறுக்கப்பட்டது.

2013 ஓகத்து 02 - சீனியின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை கிலோகிறாம் ஒன்றிற்கு ரூ.20 இலிருந்து கிலோகிறாம் ஒன்றிற்கு ரூ.27 இற்கு ஐந்து மாத காலத்திற்கு அதிகரிக்கப்பட்டது.

2013 ஓகத்து 23 - பின்வரும் உணவுப் பண்டங்களின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை நான்கு மாத காலத்திற்கு அதிகரிக்கப்பட்டது.

- உருளைக்கிழங்கு கிலோகிறாம் ஒன்று ரூ.25 இலிருந்து கிலோகிறாம் ஒன்றிற்கு ரூ.40 இற்கு
- பெரிய வெங்காயம் கிலோகிறாம் ஒன்று ரூ.30 இலிருந்து கிலோகிறாம் ஒன்றிற்கு ரூ.35 இற்கு

2013 நவெம்பர் 17 - பின்வரும் உணவுப் பண்டங்களின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை நான்கு மாத காலத்திற்குக் குறைக்கப்பட்டது.

- உருளைக்கிழங்கு கிலோகிறாம் ஒன்று ரூ.40 இலிருந்து கிலோகிறாம் ஒன்றிற்கு ரூ.10 இற்கு
- சிறிய வெங்காயம் கிலோகிறாம் ஒன்று ரூ.15 இலிருந்து கிலோகிறாம் ஒன்றிற்கு ரூ.5 இற்கு
- பெரிய வெங்காயம் கிலோகிறாம் ஒன்று ரூ.35 இலிருந்து கிலோகிறாம் ஒன்றிற்கு ரூ.10 இற்கு

2013 நவெம்பர் 22 - மாசிக் கருவாடு, நெத்தலிக் கருவாடு, கருவாடு, பட்டாணி-முழுப் பட்டாணி, பயறு (பாசிப்பயறு) உடன் தோடம்பழம், கொத்தமல்லி, சின்னச்சீரகம், பெருஞ்சீரகம், மஞ்சள், உழுத்தம் மா, நிலக்கடலை-கோதுடன், கடுகு, சோயா அவரை எண்ணெய்/ தாவர எண்ணெய்/ சூரியகாந்தி எண்ணெய்/ தேங்காயெண்ணெய் என்பவற்றின் சுத்திகரிக்கப்படாத எண்ணெய் மற்றும் தகரத்திலடைக்கப்பட்ட மீன் என்பனவற்றின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை நான்கு மாத காலத்திற்கு அதிகரிக்கப்பட்டது.

- சிறப்புப் பண்டத் தீர்வை பின்வரும் உற்பத்திகளுக்கு நான்கு மாத காலத்திற்கு விதிக்கப்பட்டது.

| விடயம் | வீதம் (ரூ./கி.கி) |
|---|---|
| உப்பு | 40 |
| மாஜரீன் | 175 |
| யோக்கட் | 625 |
| வெண்ணெய்கட்டி மற்றும் பால் உற்பத்திகள் | 880 |

- உள்நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய பல்வேறு பொருட்களின் இறக்குமதி மீதான செஸ் தீர்வை அதிகரிக்கப்பட்டது (வர்த்தமானி இல.1837/30).
- பண்ணைக் கொழுப்பு, நுளம்புச் சுருள், பற்றரி, குளியல் துவாய்கள், துணி (பட்டியற்றவை உள்ளடங்கலாக), வலைத்தடுப்பு, இரும்பு அல்லது உருக்குக் கம்பிகளிலான வேலிகள் அலுமினியத் தகடுகள் மற்றும் குழாய்கள் என்பனவற்றின் இறக்குமதிகள் மீது செஸ் தீர்வை விதிக்கப்பட்டது.
- வெளுக்கப்படாத நூல்களின் இறக்குமதிகள் மீதான செஸ் தீர்வை குறைக்கப்பட்டது.
- அலுமினிய வயர்கள், காகிதப் பலகை, மரப்பூச்செண்ணெய், வடிவமைப்புப் பேனைகள், கழுத்துப்பட்டி மற்றும் கழுத்துப்பட்டியின் அணி முடிச்சு என்பனவற்றின் இறக்குமதிகள் செஸ் தீர்வையிலிருந்து விலக்களிக்கப்பட்டன.
- மிளகு, கறுவா, கராம்பு, சாதிக்காய் மற்றும் ஏலக்காய் என்பனவற்றின் ஏற்றுமதிகள் மீது செஸ் தீர்வை விதிக்கப்பட்டது.
- நான்கு பிரிவு தீர்வை அமைப்பு பின்வருமாறு திருத்தப்பட்டது.

| வகை | முன்னைய சுங்கத் தீர்வை வீதம் (%) | புதிய சுங்கத் தீர்வை (%) |
|---|---|---|
| அத்தியாவசிய உள்ளீடுகள், உள்நாட்டில் தயாரிக்கப்படாதவை | 0 | 0 |
| மூலப்பொருட்கள் மற்றும் பகுதியளவிலான மூலப்பொருட்கள் | 5 | 7.5 |
| இடைநிலைப்பொருட்கள் | 15 | 15 |
| இறுதி நுகர்வுப் பொருட்கள் | 30 | 25 |

- தகவல் தொழில்நுட்பத்துடன் இயங்கும் அச்சுப்பொறிகள், ஒளியியல் இழைக்கம்பிகள் மற்றும் சூரியக்கல கட்டுப்பாட்டு படச்சுருள் என்பனவற்றின் இறக்குமதிகளுக்கு சுங்கத் தீர்வையிலிருந்து விலக்களிக்கப்பட்டது.

- பின்வரும் விடயங்கள் மீதான சுங்கத் தீர்வை குறைக்கப்பட்டது:

| வகை | முன்னைய சுங்கத் தீர்வை வீதம் (%) | புதிய சுங்கத் தீர்வை வீதம் (%) |
|---|---|---|
| வாசனைத் திரவியங்கள், கற்பூரம் | 30 | 7.5 |
| ஊற்றுப் பேனாக்கள், கம்பிமுனை பேனாக்கள், கழுத்துப்பட்டி, கழுத்துப்பட்டியின் அடிமுடிச்சு, கழுத்துக்குட்டை, பெற்றோலிய கூழ்மம், வெண் மெழுகு, நாரத்தைப் பழம் தவிர்ந்த ஏனைய அத்தியாவசிய எண்ணெய், மிளகு மற்றும் இஞ்சி என்பனவற்றின் அத்தியாவசிய எண்ணெய் | 15 | 7.5 |
| கொக்கோ விதைகள் | 30 | 15 |
| உறைந்த தூண்டில் இரை | 15 | 7.5 |

- பின்வரும் விடயங்களின் இறக்குமதி மீது சுங்கத் தீர்வை விதிக்கப்பட்டது:

| வகை | சுங்கத் தீர்வை வீதம் (%) |
|---|---|
| தேயிலை பொறி, உருக்கு | 7.5 |
| வாசனைப் பொருட்கள் | 15 |
| டீசல் கலப்பு ஊர்திகள் | 15 |
| சில்லு வண்டிகள் மற்றும் பகுதிகள் | 25 |

- பின்வரும் விடயங்களின் இறக்குமதி மீது சுங்கத் தீர்வை அதிகரிக்கப்பட்டது:

| வகை | முன்னைய சுங்கத் தீர்வை வீதம் (%) | புதிய சுங்கத் தீர்வை வீதம் (%) |
|---|---|---|
| உழவு இயந்திரம், சிமெந்து | 5 | 7.5 |
| வலை, மீன்பிடிக் கலங்கள், தள்ளுவண்டிகள்/ படகுகள் மற்றும் ஏனைய கலங்கள் | 15 | 25 |

- தங்கத்தின் இறக்குமதி மீதான சுங்கத் தீர்வை 5 சதவீதத்திலிருந்து 7.5 சதவீதத்திற்கு அதிகரித்ததோடு இறக்குமதி தீர்வை மேலான 100 சதவீத மேலதிகக் கட்டணம் நீக்கப்பட்டுள்ளது.
- வான் எரிபொருள் இறக்குமதி மீதான துறைமுக மற்றும் வானூர்தி அபிவிருத்தித் தீர்வை விலக்களிக்கப்பட்டது.
- ஆயுள்வேத/ மூலிகை தயாரிப்புக்களின் மருந்துப்பொருட்கள் மீது 5 சதவீதமாக துறைமுக மற்றும் வானூர்தி அபிவிருத்தி தீர்வை விதிக்கப்பட்டது.
- பின்வரும் விடயங்களின் இறக்குமதி மீதான கலால் தீர்வை அதிகரிக்கப்பட்டது.

| வகை | முன்னைய கலால் தீர்வை வீதம் | புதிய கலால் தீர்வை வீதம் |
|---|---|---|
| பெற்றோல் | லீற்றர் ஒன்றிற்கு ரூ.25 | லீற்றர் ஒன்றிற்கு ரூ.27 |
| டீசல் | லீற்றர் ஒன்றிற்கு ரூ.2.50 | லீற்றர் ஒன்றிற்கு ரூ.3 |
| லொறிகள், பாரவூர்திகள் | அலகு ஒன்றிற்கு ரூ.109,000 | 14% அல்லது அலகு ஒன்றிற்கு ரூ.109,000 |
| முச்சக்கர வண்டிகள் | 45% | 53% |

2014 பெப்புருவரி 03 - பால்மா இறக்குமதிகள் மீது வழங்கப்பட்ட சுங்கத் தீர்வைத் தளர்த்தல் கிலோகிறாம் ஒன்றிற்கு ரூ.18 இலிருந்து கிலோகிறாம் ஒன்று ரூ.68 இற்கு அதிகரிக்கப்பட்டது. எனவே, ஏற்புடைத்தான தீர்வை வீதம் கிலோகிறாம் ஒன்றிற்கு ரூ.57 ஆகும்.

2014 பெப்புருவரி 06 - உடைக்கப்பட்ட மைசூர் பருப்புக்களின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை கிலோகிறாம் ஒன்றிற்கு ரூ.22 இலிருந்து கிலோகிறாம் ஒன்றிற்கு ரூ.5 இற்கு ஐந்து மாத காலப்பகுதிக்குக் குறைக்கப்பட்டது.

2014 பெப்புருவரி 07 - உருளைக்கிழங்கு இறக்குமதிகள் மீதான சிறப்புப் பண்டத் தீர்வைகள் கிலோகிறாம் ஒன்றிற்கு ரூ.10 இலிருந்து கிலோகிறாம் ஒன்றிற்கு ரூ.25 இற்கு அதிகரிக்கப்பட்டது.

**வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவம்**

2013 சனவரி 01 - வெளிநாட்டுச் செலாவணி உழைப்பாளர்களின் கணக்குகள் ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் நடைமுறை, சேமிப்பு அல்லது தவணை வைப்புக்கள் வடிவத்தில் திறக்கப்படலாம் என அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

- வெளியக வர்த்தகக் கடன்பாட்டுத் திட்டத்தின்கீழ், உத்தரவாதத்தினால் வரையறுக்கப்பட்ட கம்பனிகள் அல்லது கரைகடந்த கம்பனிகள் தவிர்ந்த இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள், ஒவ்வொரு கம்பனிக்கும் ஒரு கலண்டர் ஆண்டுக்கான அதிகபட்சத் தொகை ஐ.அ.டொலர் 10 மில்லியன் அல்லது வேறு ஏதாவது வெளிநாட்டு நாணயத்தில் இதற்குச் சமமான தொகை என்ற நிபந்தனைக்குட்பட்டு, கம்பனி ஒன்றுக்கு ஐ.அ.டொலர் 30 மில்லியன் அல்லது வேறு ஏதாவது வெளிநாட்டு நாணயத்தில் இதற்குச் சமமான தொகையை இலங்கைக்கு வெளியே வதியும் ஒருவரிடமிருந்து பெறுவதற்கான பொதுவான அனுமதி வழங்கப்பட்டது.

- இலங்கைக்கு வெளியே வதியும் ஒருவருக்கு இலங்கையில் வதியும் ஒருவரினால் வழங்கப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகள் தொடர்பில் வெளிநாட்டு நாணயத்திலான கொடுப்பனவுகளை, அத்தகைய நாணயம் அத்தகைய நபரின் உடமையிலிருந்து 7 நாட்களுக்குள் அத்தகைய நாணயத்தை ஏற்றுக் கொள்ளும் நபரினால் பின்வரும் முறையில் விடுவிக்கப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, ஏற்றுக்கொள்வதற்கான பொதுவான அனுமதி வழங்கப்பட்டது.

    - அத்தகைய நபரின் பெயரில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியில் திறக்கப்பட்டு பேணப்படும் வெளிநாட்டுச் செலாவணி உழைப்பாளர்களின் கணக்கில் வைப்புச் செய்தல்; அல்லது
    - உரிமம் பெற்ற வர்த்தக வங்கிக்கு விற்றல்

2013 சனவரி 02 - பிணையங்கள் முதலீட்டுக் கணக்கிலிருந்து நிதிகளை மாற்றல் செய்து அதே கணக்கு வைப்பாளரின் வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு, விசேட வெளிநாட்டு முதலீட்டு வைப்புக் கணக்கு, வதியும் இலங்கையரல்லாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு, வதிவற்ற இலங்கையரல்லாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு என்பவற்றிற்கு வரவு வைப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டது.

- வாடிக்கையாளர்களின் வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வு வெளிப்படுத்துகையிலிருந்து காப்பிடுவதற்காக அத்தகைய வாடிக்கையாளர்களுடன் முன்னோக்கிய ஒப்பந்தங்களில் ஈடுபடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

2013 சனவரி 04 - 1995 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களின் நியதிகளில் குறித்துரைக்கப்பட்ட வியாபார தொழில் முயற்சியாக வகைப்படுத்தப்பட்ட கம்பனியொன்றிலுள்ள இலங்கை ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட மீட்கத்தகு முன்னுரிமைப் பங்குகளை வழங்குவதற்கும் மாற்றல் செய்வதற்கும் ஒப்புதலளிக்கப்பட்ட நாட்டு நிதியங்கள் மற்றும் பிராந்திய நிதியங்கள், இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட நிறுவன அமைப்புக்கள் மற்றும் இலங்கைக்கு வெளியே வதியும் தனிநபர்களுக்கு (இலங்கைக்கு வெளியே வதியும் இலங்கையர்கள் உள்ளடங்கலாக) குறிப்பிட்ட சில நிபந்தனைகளுக்குட்பட்டு பொதுவான அனுமதி வழங்கப்பட்டது.

2013 சனவரி 10 - வெளிநாட்டுக் கம்பனிகள் இலங்கையில் வியாபாரம் செய்யத்தக்க இடங்களை ஆரம்பித்தல் தொடர்பாக 2010.11.22ஆம் திகதியிடப்பட்ட இல.1681/10 கொண்ட அரச வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள "உள்முக முதலீட்டுக் கணக்கு" எனும் சொற்பதங்கள் "பிணையங்கள் முதலீட்டுக் கணக்கு" எனும் சொற்களினால் மாற்றப்பட்டது.

2013 சனவரி 23 - உள்முக முதலீட்டுக் கணக்கு மீது வழங்கப்பட்ட பணிப்புரை நீக்கப்பட்டதுடன் அப்பணிப்புரையின் கீழ் திறக்கப்பட்ட கணக்குகள் இலங்கை ரூபா கணக்குகளாகத் கீழ் தொடரப்படலாம் என அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களிற்கு அறிவிக்கப்பட்டது.

2013 சனவரி 24 - வெளியகக் கடன்பாட்டுத் திட்டத்தின் கீழ் தகுதியான கடன்பெறுநரால் பெறப்பட்ட கடன்களின் பெறுகைகளை, இந் நோக்கத்திற்காக திறக்கப்படும் வெளிநாட்டுச் செலாவணி உழைப்பாளர்கள் கணக்கு உட்பட, குறிப்பிட்ட கடன் பெறுநரின் பெயரில் திறக்கப்பட்டு பேணப்படும் எந்தவொரு வங்கிக் கணக்கிலும் வரவு வைப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிக்கப்பட்டனர். மேலும், வெளியகக் கடன்பாட்டுத் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட கடன் மீள்கொடுப்பனவு தொடர்பான வெளிமுக பணவனுப்பல்களை மேற்கொள்வதற்கும் மற்றும் தொடர்பான ஏனைய விதிப்பனவுகளையும் கொடுப்பனவுகளையும் மேற்கொள்வதற்கும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு அனுமதியளிக்கப்பட்டது.

- வெளியகக் கடன்பாட்டுத் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட கடன்களின் வருமானங்களை ஏதேனும் வங்கிக் கணக்கிற்கு வரவு வைப்பதற்கான அனுமதி அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களிற்கு வழங்கப்பட்டதுடன் வெளியகக் கடன்பாட்டுக் கணக்கு திறத்தலிற்கான அவசியமும் நீக்கப்பட்டது.

2013 சனவரி 30 - வதிவற்றோருக்குச் சொந்தமான இலங்கையிலுள்ள உண்மைச் சொத்துக்களைக் கொள்வனவு செய்தமைக்காக அவ்வதிவற்றோருக்கு மேற்கொள்ள வேண்டிய கொடுப்பனவுகளை இலங்கை ரூபாவில் செலுத்துவதற்கும் உண்மைச் சொத்துக்களை விற்கும் வதிவற்ற இலங்கையரின் பெயரில் வதிவற்றோர் முடக்கிய கணக்குகளை அனுமதிக்கப்பட்ட வணிகர்கள் திறப்பதற்கு வழங்கப்பட்ட அனுமதி இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட வதிவற்றோருக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

- உண்மைச் சொத்துக்களை விற்பனை செய்யும் வதிவற்றோரின் பெயரில் வதிவற்றோர் தடுத்து வைக்கப்பட்ட கணக்குகளை ஆரம்பிப்பதற்காக அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு வழங்கப்பட்ட அனுமதி இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட வதிவற்றோருக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

2013 சனவரி 31 - வெளிநாட்டு நிறுவன ரீதியான முதலீட்டாளர்கள், இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட நிறுவன அமைப்புக்கள் மற்றும் இலங்கைக்கு வெளியே வதியும் முதலீட்டாளர்கள் (இலங்கைக்கு வெளியே வதியும் இலங்கையர்கள் உட்பட) சில நிபந்தனைகளுக்குட்பட்டு கூறுநம்பிக்கையிலுள்ள கூறுகளில் முதலிடுவதற்கான பொதுவான அனுமதி வழங்கப்பட்டது.

2013 ஏப்பிறல் 29 - சில நிபந்தனைகளுக்குட்பட்டு சுங்கம் செலுத்தப்படாத துறைமுகத்திலான வர்த்தகத்திற்கான பொருட்களின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கோரிக்கைகளை வசதிப்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

2013 யூன் 12 - இலங்கையிலிருந்து குடியகலும் ஒருவர் இலங்கையிலிருந்து முதலில் வெளியேறும் நேரத்தில் இன்னொரு நாட்டின் நிரந்தர குடியுரிமை மேற்குறிப்புடன் கூடிய செல்லுபடியாகும் இலங்கைக் கடவுச் சீட்டை வைத்திருக்கும் நிபந்தனைக்குட்பட்டு, குடியகலும் தனியொருவருக்கு ஐ.அ.டொலர்கள் 150,000 வரையான ஆரம்ப குடியகல்வுப் படியொன்றினை வழங்குவதற்கு/ மாற்றல் செய்வதற்கு முதனிலை வணிகர்கள் அனுமதிக்கப்பட்டனர். மேலும், புலம்பெயர்ந்தோர் தடுத்துவைக்கப்பட்ட கணக்குகளிலிருந்து புலம்பெயர்ந்தோர் தடுத்து வைக்கப்பட்ட கணக்குகளின் உடமையாளர்களால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைய மாற்றல் செய்யப்பட்ட நிதியங்களை வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்கில் வரவு வைப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டது.

- நாணயத்தின் வகையைக் கருத்திற் கொள்ளாது, வேறொரு அதிகாரமளிக்கப்பட்ட வணிகருடன் ஒரு நபரால் பேணப்படும் ஏற்கனவேயிருக்கும் வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்து மாற்றல் செய்யப்படும் நிதியை பயன்படுத்தும் அத்தகைய நபருக்காக புதிய வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறப்பதற்கான அனுமதி அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு வழங்கப்பட்டது.

- இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட வங்கிகளுடன் அல்லது இலங்கைக்கு வெளியே நிறுவப்பட்ட அத்தகைய வங்கிகளின் கிளைகளுடன் நொஸ்ரோ கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்குமான அனுமதி அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு வழங்கப்பட்டது.

- முதலீட்டு நோக்கத்திற்காக இலங்கைக்கு உள்வரும் பணவனுப்பல்களை வசதிப்படுத்தும் வழிமுறையொன்றாக, பிணையங்கள் முதலீட்டுக் கணக்கிற்கு நிதியங்களைப் பெறுவதற்கும் அதிலிருந்து நிதியங்களை தாய் நாட்டிற்கு அனுப்புவதற்கும் அதிக நெகிழ்ச்சித்தன்மையுள்ள வசதிகளை வழங்குவதற்காக பிணையங்கள் முதலீட்டுக் கணக்கைத் திறத்தல் மற்றும் தொழிற்படுத்துதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு வழங்கப்பட்டன.

- வெளிநாட்டிற்குப் பயணம் செல்லும் இலங்கையர்களுக்கான பயணப் படியின் ஒரு பகுதியாக வழங்கப்படும் வெளிநாட்டு நாணயத் தாள்களை, ஐ.அ.டொலர்கள் 5,000 வரை அல்லது அதற்குச் சமனான வேறு ஏதாவது மாற்றத்தக்க வெளிநாட்டு நாணயத்தில் வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

- வதிவற்ற ஒருவருக்குச் சொந்தமான மற்றும்/ அல்லது அவரால் அபிவிருத்தி செய்யப்பட்ட அசையாச் சொத்துக்களின் விற்பனையிலிருந்தான மூலதன இலாபங்கள் உள்ளடங்கலான விற்பனைப் பெறுகைகளை, சொத்தானது அத்தகைய உரிமையாளரால் பன்னாட்டு வங்கித் தொழில் வழிமுறைகளினூடாக அனுப்பப்பட்ட நிதியங்களைக் கொண்டு கொள்வனவு செய்யப்பட்டது/ அபிவிருத்தி செய்யப்பட்டது என்ற நிபந்தனைக்குட்பட்டு, தாய் நாட்டிற்கு அனுப்புவதற்கு வதிவற்றோருக்கு பொதுவான அனுமதி வழங்கப்பட்டது.

- வெளிநாட்டுச் செலாவணி உழைப்பாளர்கள் கணக்கைப்பேணும் நபர்களுக்கு உள்நாட்டு வங்கித் தொழில் பிரிவுகளிலிருந்து வெளிநாட்டு நாணயத்திலான கடன்வசதிகளை விரிவுபடுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதியளிக்கப்பட்டனர்.

- புலம்பெயர்ந்தோர் தடுத்து வைக்கப்பட்ட கணக்குகளிலிருந்து மாற்றல் செய்யப்பட்ட நிதியங்களை வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு வரவு வைப்பதற்கும், நாணய வகையைக் கருத்திற் கொள்ளாது வேறொரு அதிகாரமளிக்கப்பட்ட வணிகருடன் ஒரு நபரால் பேணப்படும் ஏற்கனவேயிருக்கும் வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளிலிருந்து மாற்றல் செய்யும் நிதியங்களைப் பயன்படுத்தும் அத்தகைய நபருக்காக புதிய வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறப்பதற்கும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

- இலங்கைக்கு வெளியேயுள்ள வங்கிகளில் கணக்குகளைத் திறப்பதற்குப் பேணுவதற்கும் 2010.03.11ஆம் திகதியிடப்பட்ட இல.1644/26 கொண்ட வர்த்தமானியில் குறித்துரைக்கப்பட்ட தகுதிவாய்ந்த நபர்களுக்கு வழங்கப்பட்ட பொதுவான அனுமதியானது இன்னொரு நாட்டிடமிருந்து செல்லுபடியாகும் குடியுரிமையைக் கொண்ட நபர்கள் மற்றும் இரட்டைப் பிரசாவுரிமை கொண்ட நபர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

2013 யூன் 17 - செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகளுடன் இணங்கியொழுகுவதை உறுதிப்படுத்துவதற்குப் பொறுப்பான இணங்குவிப்பு அலுவலர் ஒருவரை நியமிக்குமாறு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

2013 ஓகத்து 26 - இலங்கைக்கு வெளியே இலங்கை அரசாங்கத்தினால் 2010, 2011 மற்றும் 2012 ஆண்டுகளில் இரண்டாந்தரச் சந்தையில் வழங்கப்பட்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளைக் கொள்வனவு செய்வதற்கும், வைத்திருப்பதற்கும் மற்றும் மாற்றல் செய்வதற்கும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

2013 ஒத்தோபர் 21 - இலங்கையில் தொழிற்படுகின்ற கப்பற்படுத்தல் நிறுவனங்கள் மற்றும் வான் நிறுவனங்களின் முகவர்களின் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் வெளிநாட்டு கப்பல் நிறுவனங்கள்/ வான் நிறுவனங்களின் முகவருக்கான வெளிநாட்டு நாணயக் கணக்குகள் என மீளப் பெயரிடப்பட்டதுடன் வெளிநாட்டுக் கப்பல் நிறுவனங்கள்/ வான் நிறுவன முகவர்களுக்கான கணக்கை ஆரம்பித்தல் மற்றும் தொழிற்படுத்தல் தொடர்பான புதிய நியதிகளும் நிபந்தனைகளும் குறித்துரைக்கப்பட்டன.

**அடுத்து வருபவை** - கம்பனி பொதுப்படுகடன் சந்தையை விருத்தி செய்வதினை வசதிப்படுத்தும் பொருட்டு வதிவற்றோரால் மேற்கொள்ளப்படும் முதலீடுகளுக்கான அனுமதிக்கப்பட்ட கருவிகளின் கிடைப்பனவினை அதிகரித்தல்.

- வெளிநாட்டுச் செலாவணியினை வருமானமீட்டும் கம்பனிகள் அவற்றின் அதே குழுவிலுள்ள கம்பனிகளுக்கு வெளிநாட்டு நாணயத்தில் கடன் வழங்குவதற்கு அனுமதித்தல்.

- வதிவற்றோர் சொத்துக்களின் குத்தகை உரிமையைப் பெற்றுக் கொள்வதை வசதிப்படுத்தல்.
- வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்கு வைத்திருப்போருக்கு எந்தவொரு நோக்கத்திற்காகவும் கடன் வழங்குவதற்கு அனுமதியளித்தல்.
- சிறப்புத் திட்டங்களின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட கணக்குகளை இலகுபடுத்தல்.
- விசேட வெளிநாட்டு முதலீட்டு வைப்பு கணக்குகளின் குறைந்தபட்ச நிலுவைத் தேவைப்பாடுகளை நீக்குதல்.
- பிரயாண அட்டைகள் வழங்கலிற்கான பொது அனுமதியினை அறிமுகப்படுத்தல்.
- மாணவர் விசாவைப் பெறுதலின் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்ய பணவனுப்பலை அனுமதித்தல்.
- சரக்கு அனுப்புவோர் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்திடமிருந்து பதிவுகளைப் பெற்றுக்கொள்வதற்கான தேவைப்பாட்டினை நீக்குதல்.
- கட்டுமானக் கைத்தொழிலிலுள்ள கம்பனிகளுக்கு வெளிநாட்டு உழைப்போர் கணக்கிலுள்ள நிலுவைகளைப் பயன்படுத்தி புதிய கடல்கடந்த செயற்றிட்டங்களுடன் தொடர்பான கொடுப்பனவினை மேற்கொள்ள அனுமதித்தல்.

**இறைத் துறை**

**அரச அரசிறை**

2013 சனவரி 01

- 2003ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்பு) சட்டம் திருத்தப்பட்டுள்ளது.
- பின்வரும் நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் வழங்கல்கள் மற்றும் புரள்வுகள் பெறுமதிசேர் வரி மற்றும் தேசத்தை கட்டியெழுப்பும் வரி என்பனவற்றிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன:
  - இலங்கை மத்திய வங்கி (நிதியியல் பணிகள் தொடர்பான பெறுமதி சேர் வரி உட்பட)
  - அரசினூடாக தயார் செய்யப்பட்ட ஏதேனும் கடன் நிதியிலிருந்து அல்லது திரட்டு நிதியத்திலிருந்து வழங்குவதற்குப் பாராளுமன்றத்தினால் வாக்களிக்கப்பட்ட பணத் தொகையிலிருந்து அரசின் சார்பில் ஏதேனும் கூட்டுத்தாபனம் இலவசமாக வழங்கிய பணிகளின் அளவிற்கு.
- கூறு நம்பிக்கை முகாமைத்துவக் கம்பனியால் கூறுநம்பிக்கைப் பொறுப்புக்கு வழங்கப்படும் பணிகள் பெறுமதிசேர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டன.
- விளையாட்டு நிகழ்வில் அல்லது விளையாட்டு நிகழ்வுடன் தொடர்பான நடவடிக்கைகளில் கலந்து கொள்ளும் பொருட்டு இலங்கைக்கு வருகை தரும் யாரேனும் விளையாட்டு வீரர், விளையாட்டு நிகழ்ச்சி ஏற்பாட்டாளர், அல்லது அனுசரணையாளர்களுக்கு வழங்கப்படும் விடுதி தங்குமிட வசதி பெறுமதிசேர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது.
- தெங்குக் கழிவுகள் மூலம் உள்ளூரில் தயாரிக்கப்படும் (தும்புத்தூள், தும்புநார், விதை, நாற்றுப் பைகள், தும்புத்தூள், உற்பத்திப் பைகள், குறுக்கிய நார்கள், தேங்காய் சிரட்டைகள்) உற்பத்திப் பொருட்கள் பெறுமதிசேர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டன.
- மொத்த விற்பனை மற்றும் சில்லறை வியாபாரத்தின் மீதான பெறுமதி சேர் வரி அறிமுகப்படுத்தப்பட்டது. அதன்படி, மொத்த அல்லது சில்லறை வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள எவரேனும் ஆள் அல்லது பங்குடமை காலாண்டுப் புரள்வு/ வழங்கல்கள் ரூ.500 மில்லியனை (விலக்களிக்கப்பட்ட புரள்வு/ வழங்கல்கள் உள்ளடங்கலாக) விஞ்சும்போது பெறுமதி சேர் வரிக்கு பதியப்படுவதற்கு கடப்பாடுடையதாகும். எவ்வாறாயினும் வரிக்குட்பட்ட வழங்கல்கள் மாத்திரமே பெறுமதி சேர் வரி விதிப்பிற்குட்படுத்தப்படும்.
- யாரேனும் ஒரு நபர் மூலம் கடன் வசதி வர்த்தகக் கணக்கிற்கு (வதிவாளர் கணக்கு) அல்லது கடன் வசதி வர்த்தகக் கணக்கிலிருந்து நபருக்கு மேற்கொள்ளப்படும் பங்கு மாற்றல் சாதனம் முத்திரைத் தீர்வையிலிருந்து விலக்களிக்கப்பட்டது.

- பின்வரும் சாதனங்கள் மீதான முத்திரைத் தீர்வை பின்வருமாறு அதிகரிக்கப்பட்டது.

| சாதனங்கள் | நடைமுறையிலுள்ள வீதம் | புதிய வீதம் |
|---|---|---|
| சத்தியக் கடதாசி | ரூ.25 | ரூ.250 |
| காப்புறுதிக் கொள்கை | ஒவ்வொரு ரூ.1,000ற்கு அல்லது கொள்கை தொடர்பாகச் செலுத்த வேண்டிய மொத்தக் கட்டுப்பணத்தின் பகுதிக்கு ரூ.0.50 | ஒவ்வொரு ரூ.1,000ற்கு அல்லது கொள்கை தொடர்பாகச் செலுத்த வேண்டிய மொத்தக் கட்டுப்பணத்தின் பகுதிக்கு ரூ.1 |
| நொத்தாரிசு அனுமதிப் பத்திரம் | ரூ.1,000 | ரூ.2,000 |
| வர்த்தக வியாபார நடவடிக்கைகளை கொண்டு நடத்துவதற்கான உரிய காலப்பகுதிக்குரிய அனுமதிப்பத்திரம் | ரூ.1000 அல்லது அனுமதிப் பத்திரக் கட்டணத்தின் 10% ஆகியவற்றில் குறைந்தது | ரூ.2000 அல்லது அனுமதிப் பத்திரக் கட்டணத்தின் 10% ஆகியவற்றில் குறைந்தது |
| மது விற்பனைக்கான உரிய காலப்பகுதிக்குரிய அனுமதிப்பத்திரம் | ரூ.10,000 | ரூ.20,000 |
| கடன் அட்டைப் பாவனை மீதான கொடுப்பனவுக்கான கேள்வி | ஒவ்வொரு ரூ.1,000இற்கும் அல்லது அதன் பகுதியொன்றிற்கு ரூ.10 | ஒவ்வொரு ரூ.1,000இற்கும் அல்லது அதன் பகுதியொன்றிற்கு ரூ.15 |

- விமான நிலைய வெளிச்செல்கை வரி ஐ.அ.டொலர் 10 இலிருந்து ஐ.அ.டொலர் 25 ஆக அதிகரிக்கப்பட்ட அதேவேளை இணையத்தளமூடான அதேநேர விசா கட்டணம் ஐ.அ.டொலர் 5ஆல் அதிகரிக்கப்பட்டது.
- இணைய அகலப்பட்டை இணைப்புக்களுக்கு தற்போதுள்ள 20 சதவீத தொலைத் தொடர்பூட்டல் தீர்வை 10 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டது.
- பந்தயம் மற்றும் சூதாட்ட வியாபார வரிக் கட்டமைப்பானது அனைத்து மறைமுகமான வரிகளுக்குப் பதிலாக உள்ளடக்கியதாக மொத்த சேகரிப்பின் 5 சதவீதமாக திருத்தப்பட்டது.
- பந்தய மற்றும் சூதாட்ட வியாபாரங்கள் மீதான பதிவுக் கட்டணங்கள் முறையே ரூ.2 மில்லியனுக்கும் ரூ.100 மில்லியனுக்கும் அதிகரிக்கப்பட்டன.
- ஏற்றுமதிசார் கம்பனிகள் மூலம் உள்ளூர் சந்தைக்காக தயாரிக்கப்பட்ட பொருட்களின் விற்பனை மீதான வரிகள் பின்வருமாறு திருத்தப்பட்டன:
  - ஆடை அல்லது மட்பாண்டத் தயாரிப்பில் ஈடுபடும் ஏற்றுமதிசார் முயற்சியாளர்கள் விற்பனை மீது செலுத்தப்பட வேண்டிய சகல மறைமுக வரிகளுக்கும் பதிலாக பெறுமதி சேர் வரி மற்றும் தேசத்தை கட்டியெழுப்பும் வரிகளுக்குட்பட்டு அவர்களின் உள்ளூர் விற்பனையை 40 சதவீதம் வரை அதிகரித்துக் கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டனர்.
  - தைக்கப்பட்ட ஆடைகளின் விற்பனை மீதான துண்டு அடிப்படையில் துண்டு ஒன்றுக்கு ரூ.25 என்ற வரி நீக்கப்பட்டது.
  - தயாரிக்கப்பட்ட பொருட்களின் விற்பனையிலிருந்தான (ஏற்றுமதி மற்றும் உள்ளூர்ச் சந்தைகளுக்கான) இலாபங்கள் மற்றும் வருமானம் மீதான வருமான வரி சலுகை வீதத்திலான 12 சதவீதத்தில் விதிக்கப்பட்டது.
- யாரேனும் ஆள் அல்லது பங்குடைமையால் நடாத்தப்படும் சகல வியாபார நடவடிக்கைகளிலிருந்தான வருடாந்த வரிக்குட்பட்ட புரள்வு அல்லது வழங்கல்கள் ரூ.12 மில்லியனை விஞ்சாதவிடத்து, அத்தகைய ஆள் அல்லது பங்குடமை பெறுமதிசேர் வரி மற்றும் மொத்த விற்பனை அல்லது சில்லறை வியாபாரங்கள் மீதான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி உள்ளடங்கலாக தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி என்பவற்றை செலுத்துவதற்கு கடப்பாடுடையவராகமாட்டார்.
- மோட்டார் ஊர்தி அரசிறை உரிமக் கட்டணம் அதிகரிக்கப்பட்டது.

2013 சனவரி 09 - நிதியியல் சட்டத்தின் கீழ் ஒரு விசேட சலுகையின் கீழ் வரி செலுத்துபவரால் இறக்குமதி செய்யப்பட்ட உந்து ஊர்திகளின் உருளை இயலளவுகளின் வரையறைகள் (1600 சிசி) நீக்கப்பட்டன.

2013 ஏப்பிறல் 01 - பின்வரும் நிறுவனங்களின் இலாபங்களும் வருமானமும் (பங்கு இலாபங்களும் வட்டியும் தவிர்ந்த) வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டன:

- இலங்கை பொது மருத்துவத் தொழில்புரியுநர் கல்லூரி
- இலங்கைச் சமூகப் பாதுகாப்புச் சபை
- திரட்டு நிதியம் அல்லது அரசினால் ஒழுங்கு செய்யப்பட்ட ஏதேனும் கடன் நிதியிலிருந்து அரச கூட்டுத்தாபனத்தால் கட்டணமின்றி வழங்கப்பட்ட பணிகளின் ஏற்பாடு
- தேசிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்துடன் ஒன்றிணைக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கி
- வரையறுக்கப்பட்ட லங்கா புத்திர அபிவிருத்தி வங்கி
- கல்வி அமைச்சில் பதிவு செய்யப்பட்டதும், அதே அமைச்சினால் வழங்கப்பட்ட சுற்றுநிருபங்கள் மற்றும் பாடத்திட்டத்தினை பின்பற்ற கட்டாயமாக்கப்பட்டதுமான அரசாங்கத்தினால் உதவியளிக்கப்படும் ஏதேனும் தனியார் பாடசாலை

- பின்வருவனவற்றிலிருந்தான இலாபங்கள் மற்றும் வருமானங்கள் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டன:

- ஏதேனும் ஒரு நாட்டில் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு இலங்கை தவிர்ந்த வேறோர் நாட்டிற்கு கொண்டு செல்லப்படும் கரைகடந்த வியாபாரத்திலிருந்தான இலாபங்கள் மற்றும் வருமானங்கள்
- ஐ.அ.டொலர் 50 மில்லியனை விஞ்சிய நேரடி முதலீட்டைக் கொண்டிருக்கும் ஓர் முதலீட்டுச் சபைக் கம்பனி தனது வரி விடுகையை அனுபவிக்கும் காலப்பகுதியில் ஏதேனும் வெளிநாட்டு ஒத்துழைப்பாளருக்கு வேத்துரிமைப் பணம், உரிமக் கட்டணம் அல்லது வடிவமைப்புக்காக மேற்கொள்ளப்படும் ஏதேனும் கொடுப்பனவு
- கம்பனிகள் சட்டத்தின்கீழ் நிறுவப்படாததும் கல்வி அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டதுமான அரச உதவி பெறும் ஏதேனும் தனியார் பாடசாலை
- ஐ.அ.டொலர் 50 மில்லியனை விஞ்சிய நேரடி முதலீட்டைக் கொண்டிருக்கும் ஓர் முதலீட்டுச் சபைக் கம்பனி தனது வரி விடுகையை அனுபவிக்கும் காலப்பிரிவினுள் இலங்கைப் பிரசை அல்லாத யாரேனும் நிபுணர் ஒருவரை இலங்கைக்கு அழைத்து வந்திருப்பின் அத்தகைய நபரின் இலங்கையிலிருந்தான ஊதியத்திலிருந்து கிடைக்கும் வருமானம்
- இலங்கைக்கு வெளியிலிருந்தான நபர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளும் கடன்களிலிருந்தான வருமானம்
- வேளாண்மைக் காணிகளில் மேற்கொள்ளப்படும் மீளப் புதுப்பிக்கக்கூடிய வலுப்பயிர் தொழில் முயற்சிகளில் இருந்தான இலாபங்களும் வருமானமும்.

இலங்கைக்கு வெளியே உழைக்கும் இலங்கைப் பிரசைகளுக்கு பின்வரும் வரிச் சலுகைகள் வழங்கப்பட்டன:

- ஒரு தனிநபர் தொடர்ச்சியாக 365 நாட்கள் காலப்பகுதிக்கு இலங்கையில் இல்லாததை அடிப்படையாகக் கொண்டு அத்தனிநபரின் வதிவுத்தன்மையைத் தீர்மானிக்கப் பிரயோகிக்கப்பட்ட விதி நீக்கப்பட்டதுடன் 183 நாட்கள் விதி பிரயோகிக்கப்பட்டது.
- ஒரு தனிநபர் இலங்கைக்கு வெளியில் ஏதேனும் மூலத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் இலாபங்களும் வருமானமும் இலங்கையில் உள்ள வங்கியினூடாக இலங்கைக்கு அனுப்பப்பட்டால், அவை வருமான வரியிலிருந்து விலக்குப்பெற்றன
- இரட்டைப் பிரசா உரிமையுள்ள நபர்களுக்கு பிரயோகிக்கப்படும், இலங்கைக்கு வெளியேயிருந்து பெறப்பட்ட இலாபங்கள் மற்றும் வருமானத்திற்கான தற்போதைய விலக்களிப்பானது, நிரந்தர வதிவு அந்தஸ்தைப் பெற்ற நபர்களுக்கும் பிரயோகிக்கப்படக் கூடியவாறு விரிவுபடுத்தப்பட்டது.

பின்வருவனவற்றிற்கு சலுகை வருமான வரி வீதங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன:

- கூறு நம்பிக்கை முகாமைத்துவக் கம்பனிகளுக்கு 10 சதவீதம் என்ற வீதத்தில்
- தொழிலிருந்தான இலாபங்கள் மீது விமானிகளுக்கும் மற்றும் இலங்கைக்கு வெளியேயுள்ள நபர்களுக்கு தொழில்சார் நிபுணத்துவப் பணிகளை வழங்கியதற்கான தகுதி வாய்ந்த ஊழியர்களுக்கும் 16 சதவீதம் என்ற வீதத்தில்
- தொழில் இழப்புக்கான நட்டஈட்டு தொழில் வருமானத்திற்கு 16 சதவீதம் என்ற வீதத்தில்
- கோழிப் பண்ணையிலிருந்தான இலாபங்களுக்கு 10 சதவீதம் என்ற வீதத்தில்
- இலங்கையில் தயாரிக்கப்பட்ட பொருட்கள் அல்லது பணிகளின் வழங்கல் தொடர்பாக வெளிநாட்டுக் கப்பல்களுக்கு வெளிநாட்டு நாணயங்களில் மேற்கொள்ளப்படும் கொடுப்பனவு கருதப்பட்ட ஏற்றுமதியாகக் கணிப்பிடப்பட்டு, அதிலிருந்து எழும் இலாபத்திற்கும் வருமானத்திற்கும் 12 சதவீதம் என்ற வீதத்தில்
- இலங்கையில் தயாரிக்கப்பட்ட பொருட்களின் வழங்கல் அல்லது பணிகளின் வழங்கலின் ஏற்றுமதியிலிருந்து கிடைக்கும் இலாபத்திற்கும் வருமானத்திற்கும் 12 சதவீதம் என்ற வீதத்தில்
- பாரம்பரியமற்ற பொருளாக வகைப்படுத்தப்பட்ட “தொகையான சேதனத் தேயிலை” இற்கு 12 சதவீதம் என்ற வீதத்தில்
- ஏதேனுமொரு ஆள் அல்லது பங்குடமை, சிறிய நீர்வலுக் கருத்திட்டத்தினை அல்லது மாற்று சக்தி மூலத்தினை தொழிற்படுத்தின், அதிலிருந்து எழும் இலாபம் மற்றும் வருமானத்திற்கு 12 சதவீதம் என்ற வீதத்தில்

- பின்வரும் தொழில்துறை மற்றும் செயற்பாடுகள் இலாபத்தைக் கணிக்கையில் எந்தவொரு பொறி இயந்திரத் தொகுதி அல்லது உபகரணங்களின் கொள்வனவுச் செலவை தேய்மானத்தின் படியொன்றாகக் கழிப்பதற்கு அனுமதிக்கப்பட்டன.

| தொழில்துறை/ நடவடிக்கைகள் | அனுமதிக்கக்கூடிய வீதம் |
|---|---|
| தொழில்நுட்ப தரமுயர்த்தல் அல்லது புதிய தொழில்நுட்பத்தினை அறிமுகப்படுத்தல் | ஆண்டிற்கு 50% |
| மாற்று வலு மூலங்களிலிருந்து மின்வலு உற்பத்தித் தேவைப்பாட்டின் மொத்தத்தில் 30 சதவீதத்திற்கு அதிகமாக மின்வலுவை வழங்குதல் | 100% |
| கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் தேவைப்பாட்டிற்கு ஏற்றவாறு தரகர் பின்னக அலுவலக முறைமையை நிறுவுதல் | 100% |
| ஏதேனும் ஏற்றுமதிக் கைத்தொழில் | ஆண்டிற்கு 50% |

- அரசாங்க நிறுவனங்களினூடாக மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி தொடர்பான செலவினங்களிற்கு அனுமதிக்கப்பட்ட மூன்று குறைப்புக்கள் தனியார் நிறுவனங்களினூடாக மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள் தொடர்பான அத்தகைய செலவினங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.
- கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட முறிகள் மற்றும் தொகுதிக் கடன்களில் முதலிடுவதன் மூலம் உழைக்கப்படும் வட்டி வருமானத்தின் மீதான பிடித்துவைத்தல் வரி விலக்களிக்கப்பட்டது
- வரிக் கூற்றை வழங்குவதற்கு பிரயோகிக்கத்தக்க தற்போதுள்ள காலவரையறை இரண்டு ஆண்டுகளிலிருந்து 18 மாதங்களாகக் குறைக்கப்பட்டது.
- பொருளாதாரப் பணிகள் கட்டணத்திலிருந்து இலங்கை மத்திய வங்கி விலக்களிக்கப்பட்டது.

2013 மே 13 - சத்திய கடதாசிகள் மீதான முத்திரை வரி ரூ.250 இலிருந்து ரூ.50 இற்குக் குறைக்கப்பட்டது.

2013 யூலை 31 - புகையிலை, சிகரெட் மற்றும் மோட்டார் வாகனங்கள் மீதான கலால் தீர்வை மேல்நோக்கி திருத்தப்பட்டது.

2014 சனவரி 01

- தொடர்பூட்டல் கைத்தொழிலுக்கான உயர் தொழில்நுட்ப சாதனங்களிற்காகப் பயன்படுத்தப்படும் செம்புக் கம்பிகளின் இறக்குமதி அல்லது உள்நாட்டுக் கொள்வனவு பெறுமதிசேர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது.
- எந்தவொரு உள்ளூராட்சி அதிகாரசபையினாலும் மேற்கொள்ளப்படும் கழிவு அகற்றல் நடவடிக்கைகளின் போது பயன்படுத்தப்படும் கழிவு நீர்த்தாங்கிகள், பாரவூர்திகளுக்கான இழுபொறிகள் மற்றும் ஏனைய பொறி மற்றும் சாதனங்களின் இறக்குமதி மீது தற்போது பிரயோகிக்கத்தக்க பெறுமதிசேர் வரி விலக்களிப்பானது அத்தகைய பொருட்களை உள்நாட்டுத் தயாரிப்பாளர்களிடமிருந்து கொள்வனவு செய்வதனையும் உள்ளடக்கத்தக்க விதத்தில் விரிவாக்கப்பட்டது.
- கழுத்துப்பட்டிகள் மற்றும் கழுத்துப்பட்டி அடிமுடிச்சு, கம்பி முனைப் பேனாக்கள், உறைந்த தூண்டிலுக்கிடப்படும் இரை, மீன் தூண்டில்/ தண்டுகள்/ சுழல் வட்டுக்கள், மீன்பிடி இழுப்புக்கருவி, கடல் உந்துவிசை இயந்திரங்கள் என்பனவற்றின் இறக்குமதி அல்லது வழங்கல் பெறுமதிசேர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது.
- சிறப்புப் பண்டத் தீர்வைக்குட்பட்ட பொருட்கள் மீதான பெறுமதிசேர் வரியிலிருந்தான விலக்கல்களிப்புக்கள் கலண்டர் ஆண்டொன்றில் தொடர்ச்சியாக மூன்று மாத காலப்பகுதியில் ரூ.250 மில்லியனை விஞ்சிய இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை உள்ளூர் சந்தைக்கு நிரம்பல் செய்யும் ஏதேனும் இறக்குமதியாளருக்கு மட்டுப்படுத்தப்பட்டது.
- பின்வரும் பொருட்களின் இறக்குமதி அல்லது வழங்கல் மீது வழங்கப்பட்ட பெறுமதிசேர் வரி விலக்களிப்புக்கள் நீக்கப்பட்டு 12 சதவீதமான பெறுமதிசேர் வரி விதிக்குட்படுத்தப்பட்டன.
  - நெல், அரிசி, கோதுமை, ஏலக்காய், கறுவா, கராம்பு, சாதிக்காய், சாதிப்பத்திரி, மிளகு, உலர்ந்த தேங்காய், இறப்பர், இறப்பர்பால், உடன் தேங்காய், பச்சை இலை உள்ளடங்கலான தேயிலை, அரிசி மா, கோதுமை மா, பாண், முட்டைகள், திரவப் பால் அல்லது பால்மா
  - வேளாண்மை பாரவூர்திகள் அல்லது பாரவூர்திகளுக்கான இழுபொறிகள்
  - தேயிலை மற்றும் இறப்பர் கைத்தொழில்களுக்கான பொறி மற்றும் சாதனங்கள்
  - தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்துவதற்கான பொறிகள்
  - வரி விடுதலைக்கு தகைமை வாய்ந்த தொழில்முயற்சியின் பொறி மற்றும் இயந்திரம்
  - மருந்தாக்கல் தயாரிப்புக்கள்
- மொத்த விற்பனை அல்லது சில்லறை வியாபாரம் மீதான பெறுமதிசேர் வரிக்கு ஏற்புடைத்தான காலாந்தரப் புரள்வான ரூ.500 மில்லியன் ரூ.250 மில்லியனாகக் குறைக்கப்பட்டது.
- பெறுமதிசேர் விதிக்குட்பட்ட பொருட்களை வழங்குகின்றதும் பெறுமதிசேர் வரியிலிருந்து விலக்களிப்புப் பெற்ற பொருட்களை வழங்குகின்றதுமான மொத்த அல்லது சில்லறை வியாபாரங்களைப் பொறுத்தவரை பொருட்களின் வழங்கலுக்குப் பொருத்தமான விலக்களிப்பானது மொத்த வழங்கலின் 25 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்படும்.
- பின்வரும் விடயங்கள் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டன:
  - தீர்வையற்ற கடைத்தொகுதியில் மேற்கொள்ளப்படும் பொருட்களின் சில்லறை வியாபாரம்
  - தயாரிப்பாளரால் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட தேங்காய் எண்ணெய் விற்பனைக்கு, மூன்று ஆண்டு காலத்திற்கு
  - திரவப் பெற்றோலிய வாயுவின் விநியோகம்
  - ஏதேனும் வானூர்தி நிலையங்களில் வெளிநாட்டு நாணயத்தில் கொடுப்பனவு செய்யப்படும் பணிகள்
- சிறப்புப் பண்டங்கள் தீர்வைக்குட்பட்ட பொருட்கள் மீதான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியிலிருந்தான விலக்களிப்புக்களின் பிரயோகம் சுங்கத்தில் மட்டும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிச் செலுத்துகைக்கு மட்டுப்படுத்தப்பட்டது. இதன்படி, அத்தகைய பொருட்களின் உள்நாட்டு வழங்கல் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியைச் செலுத்துவதற்கு பொறுப்புடையதாகும்.

- முதலீட்டு நிதியக் கணக்கில் நிதியங்களை வைப்பிடும் தேவைப்பாடு விலக்கிக் கொள்ளப்பட்டதையடுத்து, தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியிலிருந்து நிதியியல் பணிகளுக்கு வழங்கப்பட்ட விலக்களிப்பு நிறுத்தப்பட்டது.
- பாரவூர்திகளின் விற்பனையிலிருந்தான புரள்வு மீதான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியின் விலக்களிப்பானது உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட பாரவூர்திகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டது.
- மருந்தாக்கல் தயாரிப்புக்கள் இறக்குமதி இடங்களில் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி செலுத்துவதற்கு பொறுப்புடையனவாகும்.
- தொடர்பாடல் தீர்வை மீதான தற்போதைய ஏற்புடைத்தான 20 சதவீதம் 25 சதவீதத்திற்கு திருத்தப்பட்டது. தகவல் தொழில்நுட்பம் மற்றும் வியாபார முயற்சிகளை வெளிமூலங்களிலிருந்து பெறுதல் துறைகளை வசதிப்படுத்துவதற்காக இணையம்/ அகலப்பட்டை என்பவற்றினூடாக வழங்கப்படும் பணிகள் மீதான 10 சதவீத சலுகை வீதம் மாற்றமின்றியிருக்கும்.

**அடுத்து வருபவை**

2014 ஏப்பிரல் 01

- பின்வரும் நிறுவனங்களின் (பங்கு இலாபங்கள் மற்றும் வட்டியிலிருந்தான வருமானம் தவிர்ந்த) இலாபங்களும் வருமானங்களும் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படும்:
  - 2006ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை.
  - 1980ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனம்.
  - 1986ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க இலங்கை பௌதீக நிறுவன (கூட்டுத்தாபன) சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட இலங்கை பௌதீக நிறுவனம்.
- பின்வருவனவற்றிலிருந்து உழைக்கப்பட்ட இலாபங்கள் மற்றும் வருமானத்திற்கு பின்வரும் சலுகை வீதங்கள் வழங்கப்படும்.
  - ஆடை ஏற்றுமதியாளர்களுக்கு குறிப்பிட்ட சில பணிகளை வழங்குவதன் மூலம் கிடைக்கும் இலாபங்கள் மற்றும் வருமானத்திற்கு ஏற்புடைத்தான 12 சதவீதமான தற்போதைய சலுகை வரி வீதமானது பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதியாளர்களுக்கு அல்லது நேரடியாக வெளிநாட்டு தாய்க் கம்பனிகளுக்கு வழங்கப்படும் பணிகளையும் உள்ளடக்கும் விதத்தில் விரிவாக்கப்பட்டது.
  - தகுதிவாய்ந்த ஏற்றுமதி இலாபங்கள் மீதான சலுகை வீதம் நடைமுறையிலுள்ள 10 சதவீதம் 12 சதவீதத்திற்கு திருத்தப்பட்டது.
  - ரூ.500 மில்லியன் ஆண்டுப் புரள்வை விஞ்சாத நிறுவனங்களுக்கான தற்போதுள்ள 10 சதவீதமானது 12 சதவீதத்திற்குத் திருத்தப்படும்.
  - தொழில்களிலிருந்தான வருமானத்தின் மீது பிரயோகிக்கத்தக்க வேறுபட்ட வரி வீதங்களை நீக்குவதற்காக, அத்தகைய வருமானம் மீதான வரி வீதமானது பின்வருமாறு குறைக்கப்படும்:

| தொழிலிலிருந்தான வருமானம் | அதிகபட்ச வரி வீதம் |
|---|---|
| ரூ.25 மில்லியனுக்குக் கீழ் | 12% |
| ரூ.25 மில்லியன் - ரூ.35 மில்லியன் | 14% |
| ரூ.35 மில்லியனுக்கும் அதிகம் | 16% |

  - தொழில்சார் நிபுணர்களின் தொழிலிலிருந்தான வருமானம் மீது பிரயோகிக்கத்தக்க அதிகபட்ச வருமான வரி வீதம் 16 சதவீதத்திற்குக் குறைக்கப்படும்.
  - ரூ.5 மில்லியனை விஞ்சாத வரி விதிக்கத்தக்க வருமானத்தைக் கொண்டிருக்கும் கம்பனிகளுக்குப் பிரயோகிக்கத்தக்க குறைந்த வீத வரியானது நீக்கப்படும்.
- வரி விடுமுறை மற்றும் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளின் பிரயோகத்தின் மீது பின்வரும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படும்:

- ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியில் ஈடுபட்டுள்ள எந்தவொரு கம்பனிக்குமான வருமான வரியிலிருந்தான விலக்களிப்பு 01.04.2014 இற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டது.
- தகுதியான கொடுப்பனவாக ஏற்கனவேயிருக்கும் நிறுவனத்தின் விரிவாக்கத்திற்கான முதலீடுகளின் குறைப்பு 01.04.2014 இற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட அத்தகைய முதலீடுகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டது.
- "நிறைவேற்று அலுவலர்" ஒருவரின் வரைவிலக்கணத்தின் நோக்கத்திற்காக மாதாந்த ஊதியமானது ரூ.25,000 இலிருந்து ரூ.75,000 இற்கு அதிகரிக்கப்பட்டது.

**அரச செலவினம்**

2013 சனவரி 01 - 2004ஆம் ஆண்டிற்கு முன்னர் ஓய்வு பெற்ற ஓய்வூதியர்களுக்கு மாதாந்தம் ரூ.750 இலிருந்து ரூ.2500 இற்கும் 01 சனவரி, 2004 இலிருந்து 30 நவம்பர் 2004ற்குமிடையில் ஓய்வு பெற்ற ஓய்வூதியர்களுக்கு மாதாந்தம் ரூ.500இலிருந்து ரூ.1500 வரை விசேட படியாக வழங்கப்பட்டது. முன்மொழியப்பட்ட அதிகரிப்பில் 50 சதவீதம் 01 சனவரி, 2013 முதல் வழங்கப்பட்ட அதேவேளையில் எஞ்சியவை 01 யூலை, 2013 முதல் வழங்கப்பட்டது.

- 2013 இல் ஓய்வூதியம் பெற்ற அனைத்து ஓய்வூதியர்களுக்கும் செலுத்தப்படும் வாழ்க்கைச் செலவு படி மாதாந்தம் ரூ.500 ஆல் அதிகரிக்கப்பட்டு ரூ. 3,175 ஆக வழங்கப்பட்டது.

- அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான வாழ்க்கைச் செலவு படி மாதமொன்றுக்கு ரூ.750 ஆல் அதிகரிக்கப்பட்டு ரூ.6,600 ஆக வழங்கப்பட்டது.

2013 மே 01 - அரச துறையிலுள்ள அனைத்து ஊழியர்களுக்கும் மாதமொன்றுக்கு குறைந்த பட்சம் ரூ.750 மற்றும் மிகக்கூடியது ரூ.2,500 என்ற வகையில் அவர்களது அடிப்படைச்சம்பளத்தில் 5 சதவீதமான சிறப்புப் படியொன்று வழங்கப்பட்டது. அலுவலர் வகுப்பு அல்லாதவர்களின் முன்மொழியப்பட்ட தொகையில் 50 சதவீதம் 2013ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து வழங்கப்பட்டதுடன், மிகுதி 2013ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதத்திலிருந்து வழங்கப்பட்டது. அலுவலர் வகுப்பு ஊழியர்களுக்கு முன்மொழியப்பட்ட அதிகரிப்பில் 50 சதவீதம் 2013ஆம் ஆண்டு யூலை மாதத்திலிருந்து வழங்கப்பட்டதுடன், மிகுதி 2013ஆம் ஆண்டு ஒக்தோபர் மாதத்திலிருந்து வழங்கப்பட்டது.

2014 சனவரி 01 - அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான வாழ்க்கைச் செலவுப் படி மாதமொன்றுக்கு ரூ.1,200 இனால் ரூ.7,800 இற்கு அதிகரிக்கப்பட்டது.

- 2006 இற்கு முன்னர் ஓய்வு பெற்ற ஓய்வூதியர்களுக்கான வாழ்க்கைச் செலவுப் படி மாதமொன்றுக்கு ரூ.500 இனால் ரூ.3,675 இற்கும் ஏனையவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூ.350 இனால் ரூ.3,525 இற்கும் அதிகரிக்கப்பட்டது.

**படுகடன் முகாமைத்துவம்**

2013 சனவரி 24 - இலங்கை அபிவிருத்தி முறிகளின் வழங்கல் எல்லை ஐ.அ.டொலர் 750 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 1000 மில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டது.

2013 யூலை 10 - முதனிலை வணிகர்கள் கம்பனி முறிகளில் அல்லது தொகுதிக் கடன்களில் சந்தை உருவாக்குநர்களாக தொழிற்படுவதற்கு அனுமதியளிக்கப்பட்டதுடன், மொத்த முதலீடுகளின் 5 சதவீத வரையறை வரை பட்டியலிடப்பட்ட பங்குகள், பட்டியலிடப்பட்ட தொகுதிக் கடன்கள் அல்லது முறிகள் மற்றும் பட்டியலிடப்பட்ட வர்த்தகப் பத்திரங்களில் முதலிடுவதற்கும் அனுமதியளிக்கப்பட்டனர்.

2013 யூலை 11 - இலங்கை அபிவிருத்தி முறிகளின் வழங்கல் எல்லை ஐ.அ.டொலர் 1000 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 1500 மில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டது.

2013 ஓகத்து 01 - பதிவு செய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் மற்றும் உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டம் என்பனவற்றின் நியதிகளில் பான் ஏசியா பாங்கிங் கோப்பரேசன் பிஎல்சி முதனிலை வணிகராக நியமிக்கப்பட்டது.

2013 செத்தெம்பர் 18 - இலங்கை அபிவிருத்தி முறிகளின் எல்லை ஐ.அ.டொலர் 1500 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 2,250 மில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| 2013 செத்தெம்பர் 30 | - | பதிவு செய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் மற்றும் உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டம் என்பனவற்றின் நியதிகளில் ஹொங் கொங் அன்ட் சங்காய் பாங்கிங் கோப்பரேசன் லிமிடெட் மற்றும் பேர்பேர்சுவல் ரெசரிஸ் லிமிடெட் ஆகியன முதனிலை வணிகர்களாக நியமிக்கப்பட்டனர். |
| 2013 நவெம்பர் 07 | - | முதனிலை வணிகர்களுக்கும் அவர்களின் வாடிக்கையாளர்களுக்குமிடையிலான உறுதியான உறவை மேம்படுத்தும் பொருட்டு, அரச பிணையங்களிலான முதனிலை வணிகர்களுக்கான வாடிக்கையாளர் சாசனம் அறிமுகப்படுத்தப்பட்டது. |
| 2013 திசெம்பர் 26 | - | முதனிலை ஏலங்களில் ஏற்றுக்கொள்ளப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட வெற்றிகரமான விலைக்குறிப்பீடுகளின் தொகை வரை, திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் உடமையல்லா விற்பனையில் ஈடுபடுவதற்கு முதனிலை வணிகர்கள் அனுமதிக்கப்பட்டனர். |

**நாணயத் துறை**

| | | |
|---|---|---|
| 2013 மே 10 | - | மத்திய வங்கியின் மீள்கொள்வனவு வீதம் மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதம் முறையே 7.00 சதவீதத்துக்கும் 9.00 சதவீதத்துக்கும் 50 அடிப்படைப் புள்ளிகளால் குறைக்கப்பட்டன. |
| 2013 யூன் 01 | - | மத்திய வங்கி நேர்மாற்று ஏலங்களை நடாத்தும் நாட்களில் மீள்கொள்வனவு துணைநில் வசதிக்கான ரூ.100 மில்லியன் வரையறை நீக்கப்பட்டது. |
| 2013 யூலை 01 | - | நியதி ஒதுக்கு தேவைப்பாடுகள் 2 சதவீதப்புள்ளிகளால் 6 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டது. |
| 2013 யூலை 24 | - | தற்போதய திறந்த சந்தை செயற்பாடுகளின் கீழ் ஓரிரவு ஏல விற்பனைக்கான காலப்பகுதி அதே நாளில் தீர்ப்பனவு செய்யும் (ரி+0) நோக்குடன் ஒரு நாளிலிருந்து ஒரு வாரமாக விரிவாக்கப்பட்டது. அதன்படி, ஏலத்திற்கான அறிவிப்பு மற்றும் தீர்ப்பனவு அதே நாளில் (ரி+0) இருக்கும் அதே வேளை ஏலத்திற்கான நேரம் மாறாதிருக்கும். |
| 2013 ஓகத்து 30 | - | மோட்டார் வாகனங்களின் (பஸ் வண்டிகள், முதலுதவி வண்டிகள், பாரவூர்திகள் மற்றும் சரக்கு வண்டிகள் தவிர) இறக்குமதிகளுக்காக வர்த்தக வங்கிகளில் திறக்கப்படும் நாணயக்கடிதங்களுக்கு எதிரான 100 சதவீத குறைந்தபட்ச காசு அளவுத் தேவைப்பாடு விதிக்கப்பட்டது. |
| 2013 ஒத்தோபர் 15 | - | மத்திய வங்கியின் மீள்கொள்வனவு வீதமும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதமும் 50 அடிப்படைப் புள்ளிகளால் முறையே 6.50 சதவீதத்துக்கும் 8.50 சதவீதத்துக்கும் குறைக்கப்பட்டன. |
| 2014 சனவரி 02 | - | தற்போதுள்ள கொள்கை வீத வீச்சிற்குப் பதிலாக துணைநில் வீத வீச்சு உருவாக்கப்பட்டது.<br>- தற்போதுள்ள துணைநிலை மீள்கொள்வனவு வசதியானது துணைநில் வைப்பு வசதி எனப் பெயர் மாற்றப்பட்டதுடன், வங்கித்தொழில் முறைமையின் ஒரு நாளுக்குள்ளேயான மிகையான நிதியத்தின் வைப்புக்களுக்கான வீதமாக துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் இருக்கும்.<br>- தற்போதுள்ள துணைநில் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதியானது துணைநில் கடன் வழங்கல் வசதி எனப் பெயர் மாற்றப்பட்டதுடன், வங்கித்தொழில் முறைமையின் ஒரு நாளுக்குள்ளேயான கடன் வழங்கலுக்கான வீதமாக துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் இருக்கும்.<br>- துணைநில் வைப்பு வசதி வீதமானது 50 அடிப்படைப் புள்ளிகளினால் 8.0 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டதுடன், இதன் மூலம் துணைநில் வீத வீச்சானது தற்போதுள்ள 200 அடிப்படைப் புள்ளிகளிலிருந்து 150 அடிப்படைப் புள்ளிகளால் குறைக்கப்பட்டது. |
| | - | மோட்டார் வாகனங்களின் (பஸ் வண்டிகள், முதலுதவி வண்டிகள், பார ஊர்திகள் மற்றும் சரக்கு வண்டிகள் தவிர) இறக்குமதிகளுக்காக வர்த்த வங்கிகளில் திறக்கப்படும் நாணயக் கடிதங்களுக்கெதிரான 100 சதவீதமான குறைந்தபட்ச காசு அளவுத்தேவைப்பாடு நீக்கப்பட்டது. |
| 2014 பெப்புருவரி 01 | - | மத்திய வங்கியின் ரூபா கொடுக்கல்வாங்கல்களில் பூச்சியக் கொடுகடன் இடர்நேர்வு நோக்கத்துடன் துணைநில் வைப்பு வசதியின் கீழ் மத்திய வங்கியினால் திறந்த சந்தை நடவடிக்கைகளின் பங்கேற்பாளர்களுக்கு பிணை வழங்கப்பட வேண்டிய தேவைப்பாடு இடைநிறுத்தப்பட்டது. |

**நிதியியல் துறை**

**உரிமம் பெற்ற வங்கிகள்**

2013 சனவரி 02 - வர்த்தக வங்கிகளின் தேறிய திறந்த நிலைமைகள் மொத்தமாக ஐ.அ.டொலர் 120 மில்லியனுக்கு (நேர் அல்லது மறை) மேல் நோக்கித் திருத்தப்பட்டன.

2013 பெப்புருவரி 11 - புதிய கணக்கீட்டு நியமங்களுக்கு இணைவாக, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் வருடாந்த மற்றும் காலாண்டு நிதியியல் அறிக்கைகளைத் தயாரிப்பதற்காக, வழங்குவதற்காக மற்றும் வெளியிடுவதற்காக தற்போதுள்ள வடிவமைப்பிற்குப் பதிலாக ஓர் புதிய வடிவமைப்புத் தொகுதி குறித்துரைக்கப்பட்டுள்ளது.

2013 பெப்புருவரி 14 - உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் தனியான குறைந்தபட்ச மூலதனத்தைப் பேணாமல் முதனிலை வணிகர் உரிமைக்காக விண்ணப்பிப்பதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

2013 ஏப்பிறல் 04 - உரிமம் பெற்ற வங்கிகள் பங்குச் சந்தையிலிருந்து எழும் உள்ளார்ந்த இடர்நேர்வுகளை மட்டுப்படுத்துவதற்கு வெளிப்படுத்துகை தொடர்பாக முன்மதியான உள்ளக வரையறைகள் போன்ற பொருத்தமான இடர்நேர்வுமுகாமைத்துவ நியமங்களை நிறுவுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன. இடர்முகாமைத்துவ நியமங்களையும் கொள்கைகளையும் நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் ஒப்புதலளிக்குமாறும், சம்பந்தப்பட்ட தரவுகளைத் தொடர்ந்து மதிப்பிடுமாறும் உரிமம் பெற்ற வங்கிகளின் பணிப்பாளர் சபைக்கு அறிவுறுத்தப்பட்டது.

- உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் சந்தைப் பெறுமதிக்குக் கீழ் அசையாச் சொத்துக்களின் விற்பனை, மாற்றுல், ஒப்படை அல்லது அகற்றல் அல்லது அச்சொத்துக்களின் பெறுமதியை சந்தைப் பெறுமதிக்கு மேல் உயர்த்துதல் என்பவற்றுக்கு முன்னைய பணிப்புரையில் கோரப்பட்ட நாணயச் சபையின் எழுத்து மூலமான முன்னொப்புதல் மாற்றப்பட்டு வங்கிகள் இந்நடவடிக்கைகளை வங்கி மேற்பார்வைத் திணைக்கள பணிப்பாளரின் எழுத்து மூலமான முன்னொப்புதலுடன் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டன.

2013 ஏப்பிறல் 05 - நிறைகாப்புடைய கூறு நம்பிக்கைகள் மீதான வர்த்தக வங்கிகளின் முதலீடுகள் நியதிச் சட்ட திரவச் சொத்து விகிதத்தினை பூர்த்தி செய்யும் நோக்கத்திற்காக நிபந்தனைகளுக்குட்பட திரவச் சொத்துக்களாகத் தீர்மானிக்கப்பட்டன.

2013 ஏப்பிறல் 12 - வங்கியொன்றின் பணிப்பாளராகத் தகுதி பெறுவதற்கு 10 குறித்துரைக்கப்பட்ட வியாபார நிறுவனங்களுக்கு மேலதிகமாகப் பணிப்பாளர் பதவி வகிக்கக்கூடாது என்ற கட்டுப்பாட்டை மீளப் பெறுவதற்காக உரிமம் பெற்ற வங்கிகளுக்கான தற்போதைய கம்பனி ஆளுகைப் பணிப்புரைகள் திருத்தப்பட்டன.

2013 ஏப்பிறல் 17 - 2013 தொடக்கம் 2015 காலப்பகுதியில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் ஒவ்வொன்றினதும் ஐ.அ.டொலர் 50 மில்லியன் வரையான வெளிநாட்டுக் கடன்பாடுகள் மூலதன நிதியின் 15 சதவீத வரையறையிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. மேலும், மேற்கூறப்பட்ட நிதிகளின் பயன்பாட்டினூடாக வங்கிகளினால் வழங்கப்பட்ட வேளாண்மைத் துறையல்லாத கொடுகடன் வசதிகள் வேளாண்மை துறைக்கான கட்டாய கடன்வழங்கல் கணிப்பீட்டின்போது விலக்களிக்கப்பட்டுள்ளது.

2013 ஏப்பிறல் 24 - குறைந்த செலவிலான வீட்டு அபிவிருத்தித் திட்டம், நிலைபேறுடைய வலு மூலங்களிலான முதலீடுகள் மற்றும் மகளிர் தொழில்முயற்சியாண்மை துணிகர தொழில்முயற்சி முதலீட்டுச் செயற்றிட்டங்கள் ஆகியவற்றை உள்ளடக்கும் விதத்தில் முதலீட்டு நிதியக் கணக்கின் பயன்பாடு விரிவாக்கப்பட்டது.

2013 ஏப்பிறல் 30 - வேளாண்மைத் துறைக்கான கட்டாயக் கடன் வழங்கல் மீதான தற்போதுள்ள வழிகாட்டல்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கித் திருத்தப்படுகிறது:

- ஏனைய வங்கிகளுக்கும் நிதிக் கம்பனிகளுக்கும் வேளாண்மை கடன் வழங்கல்களுக்காக வங்கிகள் வழங்கிய கடன்களை உள்ளடக்குவதற்கு, வங்கிகளினால் அத்தகைய கடன்கள் பேணப்படுவதனை அடையாளம் காண்பதற்குப் பொருத்தமான கண்காணிப்புப் பொறிமுறையொன்று இருக்க வேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்டு அனுமதியளித்தல்.
- உள்நாட்டு வேளாண்மை உற்பத்திகளை பயன்படுத்தும் உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் வேளாண்மைத் துறைக்கு இடையேற்பாட்டாளர்களாகச் செயற்படும் கம்பனிகள் மற்றும் உற்பத்திகள் என்பவற்றுக்கு வங்கிகள் வழங்கிய கடன்களை உள்ளடக்க அனுமதியளித்தல்.

| | |
|---|---|
| | - கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளினாலும் வெளிநாட்டுக் கிளைகளினாலும் இலங்கைக்கு வெளியே வழங்கப்பட்ட கடன்கள், முற்பணங்கள் மற்றும் அரசாங்கத்தினால் ஊக்குவிக்கப்படும் பாரிய அரச மற்றும் ஏனைய உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்களுக்கான நேரடி நிதியிடல் என்பவற்றை நீக்குதல். |
| 2013 மே 01 | - வணிக வங்கிகளினால் மேற்கொள்ளப்படும் ஒதுக்குக் கணிப்பீடு மற்றும் பேணல் என்பவற்றின் காலப்பகுதிகள் பின்வருமாறு மீளத் திருத்தப்படுகிறது.<br>- ஒவ்வொரு கலண்டர் மாதமும் இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. (காலப்பகுதி அ மற்றும் காலப்பகுதி ஆ):<br>- காலப்பகுதி அ 1ஆம் திகதி தொடக்கம் 15ஆம் திகதிவரை (இரண்டும் உள்ளடங்கலாக) ; மற்றும்<br>- காலப்பகுதி ஆ 16 திகதி தொடக்கம் மாதத்தின் இறுதி நாள் வரை (இரண்டும் உள்ளடங்கலாக).<br>ஏதேனும் மாதத்தின் ஒதுக்கு பேணல் காலப்பகுதி அ இல் பேணப்பட வேண்டிய ஒதுக்கு தேவைப்பாடுகள் அ காலப்பகுதியின் முன்னைய மாதத்தின் நாளாந்த சராசரி வைப்புப் பொறுப்புக்களை அடிப்படையாகக் கொண்டதாகும். அதேவேளை ஏதேனும் மாதத்தின் ஒதுக்கு பேணல் காலப்பகுதி ஆ விற்கான ஒதுக்கங்கள் காலப்பகுதி ஆ இன் முந்திய மாதத்தின் சராசரி நாளாந்த வைப்புப் பொறுப்புக்களை அடிப்படையாகக் கொண்டது. |
| 2013 மே 31 | - பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழியின் சீரான தொழிற்பாட்டை உறுதிப்படுத்துவதற்கான சில முன்மதியானதும் ஒழுங்கு முறையானதுமான தேவைப்பாடுகளை விதிப்பதற்காக 2013ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க பொதுவான பணிப்புரை லங்கா கிளியர் (பிறைவேற்) லிமிடெட்டிற்கும் அதேபோல் உறுப்பினர் வங்கிகளுக்கும் வழங்கப்பட்டது. |
| 2013 யூன் 07 | - 2009ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க கொடுப்பனவு அட்டைகளின் பணி வழங்குநர் ஒழுங்குவிதிகளுக்குப் பதிலீடாக 2013ஆம் ஆண்டின் 1ஆம் இலக்கக் கொடுப்பனவு அட்டைகள் மற்றும் செல்லிடக் கொடுப்பனவு முறைமைகள் ஒழுங்குவிதிகள் வழங்கப்பட்டது.<br>- உரிமமளிக்கப்பட்ட வங்கிகள் கடன் அட்டை முற்பணங்கள் மீதான வட்டி வீதத்தினை தற்போதைய 28 சதவீத மட்டத்திலிருந்து வருடாந்தம் 24 சதவீதமாகக் குறைப்பதற்கும் மற்றும் ஏனைய அனைத்து கடன்கள் மற்றும் முற்பணங்கள் தற்போதைய மட்டத்திலிருந்து வருடாந்தம் 24 சதவீதத்தினை விஞ்சாத வகையில் இருத்தல் வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்பட்டன. |
| 2013 யூன் 12 | - வர்த்தக வங்கிகள் மீது அமுல்படுத்தப்பட்ட அரசாங்கப் பிணையங்களின் பிணையங்கள் இலங்கை மத்திய வங்கி பிணையங்கள் மற்றும் நிலையான வைப்புக்களுக்கெதிராக உரிமமளிக்கப்பட்ட நிதியியல் கம்பனிகளுக்கு வழங்கப்படும் நிதியியல் வசதிகள் வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளரின் முன் அனுமதியுடன் வழங்கப்படல் வேண்டும் என்ற வரையறை மீளப் பெறப்பட்டது. |
| 2013 யூலை 02 | - வாடிக்கையாளர்களிடமிருந்து அட்டை வழங்குநர்களால் விதிக்கப்படும் கட்டணங்கள் மற்றும் அட்டை வழங்குநர்களிடமிருந்து நிதியியல் ஏற்பாட்டாளர்களினால் விதிக்கப்படும் பரிமாற்றல் கட்டணம் என்பவற்றின் மீதான உச்ச எல்லைகளை நடைமுறைப்படுத்துவதற்காக 2013ஆம் ஆண்டில் 2ஆம் இலக்க பொதுவான பணிப்புரை வழங்கப்பட்டது. |
| 2013 யூலை 26 | - அனைத்து உரிமம் பெற்ற வங்கிகளும் ஏற்கனவே வழங்கப்பட்ட கடன் வசதிகள் உட்பட அனைத்துக் கடன்கள் மற்றும் முற்பணங்களின் மீதும் விதிக்கப்படுகின்ற தண்ட வட்டி வீதங்கள் செலுத்தத் தவறிய காலப்பகுதியில் நிலுவையிலுள்ள தொகையின் மீது ஆண்டொன்றிற்கு 2 சதவீதத்தினை விஞ்சாததொரு மட்டத்திற்கு குறைக்குமாறு வேண்டப்பட்டன. |
| 2013 யூலை 31 | - சகல இடர்நேர்வுகளுக்கான வெளிப்படுத்துகையை காப்பதற்கு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகளுக்கு மேலதிகமாக போதுமான மூலதனத்தைப் பேணும் பொருட்டு தூண் 1இன் கீழ் மேற்பார்வை மீளாய்வுச் செயன்முறை (பாசல் II தூண் 2) மீதான பணிப்புரையொன்று வழங்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 2013 செத்தெம்பர் 17 | - | உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் கணக்காய்வு செய்யப்பட்ட ஆண்டறிக்கைகள்/ நிதியியல் அறிக்கைகள், காலாண்டு நிதியியல் அறிக்கைகள் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பின் கீழ் தேவைப்படுத்தப்பட்ட வங்கியின் இடர்நேர்வு முகாமைத்துவத் தரம் தொடர்பான வெளிப்படுத்துகைகளை அவற்றின் இணையத்தளத்தில் பிரசுரிக்குமாறு வேண்டப்பட்டன. |
| 2013 நவெம்பர் 08 | - | 2008.11.06ஆம் திகதியிடப்பட்ட முன்னைய சுற்றறிக்கையுடன் இணங்கியொழுகுமாறும் தவறாக வழிநடத்தக்கூடியதும் தார்மீக ஒழுங்கற்றதுமான விளம்பரங்களைத் தவிர்க்கும் அதேவேளை அனைத்து முக்கியமான தகவல்களுக்கும் முக்கியத்துவம் வழங்குமாறும் உரிமம் பெற்ற வங்கிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது. |
| 2013 நவெம்பர் 22 | - | நிதியியல் துறையின் ஒருங்கிணைப்பு அறிவிக்கப்பட்டது.<br><br>- முதன்மைக் கம்பனியின் துணைக் கம்பனியாக இருக்கும் எந்தவொரு நிதிக் கம்பனியும் அவற்றின் தொழிற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்காக முதன்மைக் கம்பனியினால் உள்வாங்கப்பட வேண்டும்.<br><br>- நிதிக் கம்பனிகளைக் கொண்டிருக்கும் வங்கிகள் வங்கிகளை மேலும் பலப்படுத்துவதற்காக குழுமத்திற்குள்ளிருக்கும் நிதிக் கம்பனிகளை கையகப்படுத்துவதன் மூலம் அவற்றின் தொழிற்பாடுகளை ஒருங்கிணைக்க வேண்டிய அதேவேளை வங்கிகள் அல்லது கம்பனிகளின் கையகப்படுத்தல் செலவினங்களுக்காக தகைமை பெறுவதற்கான கொடுப்பனவுகளை வழங்க வேண்டும்.<br><br>- அபிவிருத்தி வங்கிகளை இணைப்பதற்கு ஊக்குவித்தல். |
| 2013 திசெம்பர் 04 | - | இலங்கை அரசாங்கத்தால் விநியோகிக்கப்பட்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளில் முதலீடு செய்வதற்கு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் கரைகடந்த வங்கியியல் பிரிவுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது. |
| | - | இலங்கை அரசாங்கத்தால் விநியோகிக்கப்பட்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளிலான வங்கிகளின் முதலீடுகள் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் சட்ட ரீதியான திரவச்சொத்து விகிதத்தினைப் பூர்த்தி செய்யும் நோக்கத்திற்கான திரவச்சொத்துக்களாகத் தீர்மானிக்கப்பட்டன. |
| 2013 திசெம்பர் 30 | - | காசோலை பிரதிமைப்படுத்தல் மற்றும் சுற்றோட்டக் குறைப்பு முறைமைக்கு செய்யப்பட்ட தொழில்நுட்ப முன்னேற்றங்களின் முழு நன்மையினையும் வங்கி வாடிக்கையாளருக்குக் கிடைக்கச் செய்யும் குறிக்கோளுடன் பங்கேற்கும் நிறுவனங்கள் மீதான 2007ஆம் ஆண்டின் 1ஆம் இலக்கப் பொதுவான பணிப்புரையான வாடிக்கையாளரிடமிருந்து காசோலை வைப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கும் வாடிக்கையாளருக்கான காசோலைப் பெறுகைகளை வரவு வைப்பதற்குமான பணி வசதிகள் மற்றும் நியம நேரங்கள் பற்றிய பணிப்புரைக்குப் பதிலாக காசோலை வைப்புக்களை ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் காசோலைப் பெறுகைகளை வரவு வைத்தல் என்பன தொடர்பான பணி வசதிகள் மற்றும் நியம நேரங்களுக்கான 2013ஆம் ஆண்டின் 3ஆம் இலக்கப் பொதுவான பணிப்புரை விடுக்கப்பட்டது. |
| **அடுத்து வருபவை** | - | பாசல் II இன் தூண் 1 இன் கீழான முன்னேற்றமடைந்த அணுகுமுறைகளைத் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்துதல். |
| | - | பாசல் III மூலதன நியமங்களுடன் இசைந்த விதத்தில் பொருத்தமான ஒழுங்குமுறைகளை அறிமுகப்படுத்துதல். |
| | - | வங்கித்தொழில் குழுமங்களின் ஒருங்கிணைந்த மேற்பார்வைக்கான அனைத்தையுமுள்ளடக்கிய மேற்பார்வைக் கட்டமைப்பொன்றினை நடைமுறைப்படுத்தல் |
| | - | பேரண்ட முன்மதியான குறிகாட்டிகளைத் தொடர்ந்தும் பகுப்பாய்வு செய்வதுடன் சந்தை மற்றும் ஏனைய உள்ளார்ந்த பொருளாதார அதிர்வுகளையும் திரட்சிகளையும் அத்தகைய இடர்நேர்வுகளை அவதானிக்கும் வேளைகளில் மதிப்பீடு செய்வதற்கு வெளிப்படுத்துகை மீதான முன்மதியுடைய ஒழுங்குவிதிகளை விடுத்தல் |
| | - | வங்கிகளின் அழுத்தப் பரீட்சிப்புக் கட்டமைப்பின் மீது வழிகாட்டல்களை வழங்குதல். |

- புதிய கணக்கீட்டு நியமங்களுடன் இசைந்து செல்லும் விதத்தில் ஏற்கனவேயிருக்கும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பிற்குப் பொருத்தமான மாற்றங்களைத் தொடர்ந்தும் ஒருங்கிணைத்தல்.
- புதிய தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பு அறிக்கையிடல் முறைமையொன்றை அறிமுகப்படுத்துதல்
- ஏற்கனவேயிருக்கும் பணிப்புரைகள் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகளைத் திருத்துதல்
- மைய வங்கித்தொழில் முறைமைகள் மற்றும் வங்கிகளால் பயன்படுத்தப்படும் தகவல் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட ஏனைய இயங்கு தளங்களுக்கான குறைந்தபட்ச நியமங்களை உருவாக்குதல்.

**ஏனைய நிதியியல் நிறுவனங்கள்**

2013 மே 15 - உரிமம் பெற்ற நிதியியல் நிறுவனங்கள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளினால் பின்பற்றப்பட வேண்டிய இலங்கைக் கணக்கிடல் நியமங்கள் மற்றும் 32, 39 மற்றும் இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமங்கள் 7 என்பவற்றின் மீதான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன.

2013 யூன் 07 - நிதியியல் கம்பனிகளின் (அமைப்பியல் மாற்றங்கள்) பணிப்புரைகள் தற்போதைய நிதியியல்துறை அபிவிருத்திகளுக்கு இணைவாகத் திருத்தப்பட்டன.

2013 யூலை 26 - நிதிக் கம்பனிகளின் தொடர்புபட்ட நபர்களுக்கு வழங்கப்பட்ட கடன் வசதிகளைப் பதிவழித்தலுக்கு தேவைப்படுத்தப்பட்ட நாணயச்சபையின் முன் அனுமதி, வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் திணைக்களப் பணிப்பாளரின் அனுமதியினால் மாற்றீடு செய்யப்பட்டது.

- நிதி நிறுவனங்களினால் விசேடமாக திரவத்தன்மை மற்றும் வட்டி/நறுக்கு வீதங்கள் போன்ற விடயங்களில் வழங்கப்பட்ட கொடுகடன் பத்திரங்கள் மீதான ஓர் ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டது.

2013 செத்தெம்பர் 07 - உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளினால் எதிர்நோக்கப்படும் திரவத்தன்மை கட்டுப்பாடுகளுக்கு உதவுவதற்காக இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித்திட்டம் மூலம் ஓர் திரவத்தன்மை உதவித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

2013 செத்தெம்பர் 17 - சில வெளிப்படுத்துகை ஏற்பாடுகளைத் திருத்துவதற்கான கம்பனி ஆளுகை (திருத்தப்பட்டது) பணிப்புரை வழங்கப்பட்டது.

2013 திசெம்பர் 05 - உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் 2014.01.01 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் சேமிப்புச் சான்றிதழ்கள் உள்ளடங்கலாக வட்டி உழைக்கும் சேமிப்புக்கள் மற்றும் கால வைப்புக்களுக்கு எந்தவொரு வட்டியல்லாத ஊக்குவிப்புக்களையும் வழங்க வேண்டாம் என தேவைப்படுத்தப்பட்டன.

2013 திசெம்பர் 18 - உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளால் செலுத்தப்பட வேண்டிய உரிமம் வழங்கப்பட்ட முதலாவது ஆண்டுக்கான உரிமக் கட்டணம் மற்றும் வருடாந்த உரிமக் கட்டணம் என்பன அதிகரிக்கப்பட்டன.

**ஏனையவை**

2013 சனவரி 01 - வரண்ட வலய வாழ்வாதார ஆதரவு மற்றும் பங்குடமை நிகழ்ச்சித்திட்டம்- சுழலும் நிதிய கடன் நிறுவப்பட்டது.

2013 சனவரி 31 - 2006ஆம் ஆண்டு 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல் வாங்கல் அறிக்கைகள் சட்டத்தின் பிரிவு 2(3ஆம் நியதிகளில்) உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்து கொள்ளுங்கள் மற்றும் வாடிக்கையாளர்களை நெருக்கமாகக் கண்காணித்தல் ஒழுங்கு விதிகள் அனைத்து அதிகாரமளிக்கப்பட்ட நாணயமாற்று கம்பனிகளுக்கும் வழங்கப்பட்டது.

2013 பெப்புருவரி 12 - 2013ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டம் திருத்தப்பட்டது.

2013 பெப்புருவரி 15 - இலங்கையில் பணத்தரகு நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தலுக்காக 2013ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க பணத்தரகு ஒழுங்குவிதிகள் இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| | - | பணத்தரகு கம்பனிகளினால் செலுத்தப்பட வேண்டிய வருடாந்த பத்திரக் கட்டணம் தொடர்பான வழிகாட்டல்கள் இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்டன. |
| 2013 மாச்சு 14 | - | நீண்டகால மற்றும் பொதுவான கடன் தீராற்றல் அளவு விதிகள் நோக்கத்திற்காக இலங்கையில் நிலம் மற்றும் கட்டடங்களின் பெறுமதியினை மதிப்பிடுவதற்கு மதிப்பீட்டாளர் ஒருவர் கொண்டிருக்க வேண்டிய பிரமாணங்களைக் குறித்துரைக்கும் சுற்றறிக்கையொன்றை இலங்கை காப்புறுதிச் சபை அனைத்து காப்புறுதிக் கம்பனிகளுக்கும் வழங்கியது. |
| 2013 ஏப்பிறல் 26 | - | வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் II - சுழலும் நிதிய கடன் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. |
| 2013 மே 02 | - | 2000ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க காப்புறுதித் தொழில் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட காப்புறுதிக் கம்பனிகள் மற்றும் காப்புறுதித் தரகுக் கம்பனிகளின் ஆகக் குறைந்த மூலதனத் தேவைப்பாடு பின்வருமாறு அறிவிக்கப்பட்டது.<br>- 2011.06.30ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ பதிவுசெய்யப்பட்ட அனைத்துக் காப்புறுதிக் கம்பனிகளும் 2015.02.11 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ அவற்றின் ஆகக் குறைந்த செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்தை காப்புறுதி வியாபாரத்தின் ஒவ்வொரு வகைக்கும் ரூ.500 மில்லியன் வரை அதிகரிக்குமாறு தேவைப்படுத்தப்பட்டன.<br>- 2014.12.31அன்றோ அல்லது அதற்கு முன்னரோ அவற்றின் ஆகக் குறைந்த செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்தை ரூ.2.5 மில்லியன் வரை அதிகரிக்குமாறு தேவைப்படுத்தப்பட்டன. |
| 2013 மே 14 | - | நிதி திட்டமிடல் அமைச்சினால் தேசிய வேளாண் வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினை, அதன் நுண்பாக நிதியியல் கூறு நீங்கலாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சிற்கு மாற்றுதல். |
| 2013 மே 23 | - | "கிழக்கு மாகாணத்தில் பொருளாதார நடவடிக்கைகளை மீளத் தொடங்குவதற்கான கடன் திட்டம் சுழலும் நிதியும் - கட்டம் III " நிறுவப்பட்டது. |
| 2013 யூன் 13 | - | தேசிய சேமிப்பு வங்கிக்காகவும் அதன் சார்பிலும் பங்குத் தரகர்களால் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளை நீக்குவதற்கான பணிப்புரையொன்றை இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு விடுத்தது. |
| 2013 ஓகத்து 23 | - | உதவுதொகை முன்வைப்பு மற்றும் விற்பனைக்கான முன்வைப்பின் மூலம் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்படுவதற்கு எதிர்பார்க்கும் பொதுக் கம்பனிகளின் பொதுவான பட்டியலிடல் தேவைப்பாடுகளைக் கூட்டிணைத்து பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு பணிப்புரையொன்றை விடுத்தது. |
| 2013 ஓகத்து 29 | - | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களால் தொழிற்படுத்தப்படும் வர்த்தக அளவிலான பாற்பண்ணை அபிவிருத்தி கடன் திட்டத்தினை நடைமுறைப்படுத்துதல் |
| 2013 ஒத்தோபர் 11 | - | பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு 2012.03.02ஆம் நாளன்று இடைநிறுத்திய 'அறிமுகத்தினை', மற்றைய விடயங்களுடன் ஆவணங்களைப் பாதுகாக்கும் பொறிமுறை, தொடர்பான விலை மற்றும் வெளிப்படுத்துகைத் தேவைப்பாடுகள் என்பனவற்றில் ஏற்பட்ட முன்னேற்றங்களைக் கருத்திற்கொண்டு, பங்குரிமை மூலதனத்தை பட்டியலிடுகின்ற முறையாக மீள நடைமுறைக்குக் கொண்டு வந்தது. |
| 2013 ஒத்தோபர் 29 | - | இலக்கிடப்பட்ட நிதியியல் தண்டங்களை நடைமுறைப்படுத்துவதனூடாக பயங்கரவாதம் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலைத் தடுத்தல் மற்றும் ஒடுக்குதலுக்கான கடப்பாடுகள் தொடர்பான பணிப்புக்கள் உரிமம் பெற்ற வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற நிதிக்கம்பனிகள் அறிக்கையிடும் நிறுவனங்களுக்கு விடுக்கப்பட்டன. |
| 2013 நவம்பர் 04 | - | இலக்கிடப்பட்ட நிதியியல் தண்டங்களை நடைமுறைப்படுத்துவதனூடாக பயங்கரவாதம் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலைத் தடுத்தல் மற்றும் ஒடுக்குதலுக்கான கடப்பாடுகள் தொடர்பான பணிப்புக்கள் காப்புறுதிக் கம்பனிகள் மற்றும் பங்குத்தரகர்கள்ள அறிக்கையிடும் நிறுவனங்களுக்கு விடுக்கப்பட்டன. |
| 2013 திசெம்பர் 12 | - | 2014.01.01 இலிருந்து தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல்வாங்கல்களுடன் தொடர்புடைய சிறந்த நடைமுறைகளின் கோவையைப் பின்பற்றுமாறு பட்டியலிடப்பட்ட கம்பனிகளைத் தேவைப்படுத்தும் பணிப்பு ஒன்று பட்டியலிடப்பட்ட கம்பனிகளுக்கு விடுக்கப்பட்டது. |

2013 திசெம்பர் 17 - கூறுநம்பிக்கை நிதியங்களின் நிலையான வருமான சாதனங்களுக்கு ஏற்புடைத்தான நாளாந்த மதிப்பீட்டு முறைகள் பின்வருமாறு குறித்துரைக்கப்பட்டன:

- 366 நாட்களுக்கும் குறைவான முதிர்ச்சிக் காலத்தைக் கொண்ட குறுங்கால திரவத்தன்மையான நிலையான வருமானப் பிணையங்களில் மட்டும் முதலிடப்படும் அனைத்து பணச் சந்தை நிதியங்களும் செலவுடன் ஒன்றுசேர்ந்த வட்டியைக் கூட்டிய முறையிலேயே தொடர்ந்தும் மதிப்பிடப்படல் வேண்டும்.
- அரசாங்கப் பிணையங்கள் உட்பட ஏனைய அனைத்துப் பட்டியலிடப்படாத நிலையான வருமானப் பிணையங்களில் முதலிடப்படும் ஏனைய அனைத்து நிதியங்களும் சந்தைப்படியான அடிப்படையில் மதிப்பிடப்பட வேண்டும்.

2013 திசெம்பர் 20 - தொடர்ச்சியான பட்டியலிடல் தேவைப்பாடொன்றாக, குறைந்தபட்ச பகிரங்கப்படுத்தலுடன் தொடர்பான விதிகள், கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட கம்பனிகளுக்குப் பின்வரும் விதத்தில் அறிமுகப்படுத்தப்பட்டன:

- பிரதான பலகையில் பட்டியலிடப்பட்ட அனைத்துக் கம்பனிகளும் மொத்த சாதாரண வாக்குரிமையுள்ள பங்குகளில் குறைந்தபட்சம் 20 சதவீதமானவை பகிரங்கப்படுத்தப்பட்டு குறைந்தபட்சம் 750 பொதுப் பங்குதாரர்களிடம் காணப்பட வேண்டும் அல்லது குறைந்தபட்சம் 500 பொதுப் பங்குதாரர்களிடம் கம்பனியின் பொது உடமையின் ரூ.5 பில்லியனான சந்தை மூலதனவாக்கம் காணப்படும் அதேவேளை 10 சதவீதமான பொது உடமையைப் பேண வேண்டுமெனக் கட்டாயப்படுத்தப்பட்டன.
- 'திறி சவி' பலகையில் பட்டியலிடப்பட்ட அனைத்துக் கம்பனிகளும் குறைந்தபட்சம் 200 பொதுப் பங்குதாரர்களின் கைகளில் உள்ள பட்டியலிடப்பட்ட மொத்தப் பங்குகளில் குறைந்தபட்சம் 10 சதவீதத்தை கொண்டிருத்தல் வேண்டும்.

2013 திசெம்பர் 27 - பங்குகள் மீதான வணிகம் தொடர்பில் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் பட்டியலிடல் விதிகளின் கீழ் தற்போது பணிப்பாளர்களுக்கு ஏற்புடைத்தாயிருக்கும் வெளிப்படுத்தல் தேவைப்பாடுகள், முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கும் ஏற்புடைத்தான விதத்தில் விரிவாக்கப்பட்டது. இப்பணிப்புரையின்படி, 2014.04.01 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் பணிப்பாளர்கள் மற்றும் முதன்மை நிறைவேற்று அலுவலர்கள் அவர்களின் பங்குகளிலான வணிகங்களின் வெளிப்படுத்தல்களை ரி+5 இற்குள் மேற்கொள்ள வேண்டுமென பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவால் தேவைப்படுத்தப்பட்டனர்.